இலவச பிரதி
Registered as a NewsPaper
விலை ரூபா : 10.00

# ஈழநாதம்
மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆவணி-21 | 06-09-2005 | செவ்வாய்க்கிழமை | ஓசை-201


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247 (சி-12761)

பொதுக்கட்டமைப்பைக் கைவிடுதல் | ஒற்றையாட்சியின் கீழ் பிரச்சினைக்குத்தீர்வு | யுத்த நிறுத்த ஒப்பந்த மீள்பரிசீலனை | நோர்வேயின் பங்களிப்பு மீள் பரிசீலனை

# மகிந்த ராஜபக்ஷவுக்கு 12 நிபந்தனைகளுடன்
# ஆதரவு அளிப்பதற்கு ஜே.வி.பி. தீர்மானம்!

## செய்தியாளர் மாநாட்டில் அறிவிப்பு



(கொழும்பு)

**சிறிலங்கா சனாதிபதித்தேர்தலில் சுதந்திரக்கட்சி வேட்பாளரான மகிந்த ராஜபக்ஷவுக்கு 12 நிபந்தனைகளுடன் ஆதரவளிப்பதாக ஜே.வி.பி. கொழும்பில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அறிவித்தது.**

இவ்ஊடகவியலாளர் மாநாட்டில் தமது 12 நிபந்தனைகளையும் உத்தியோக பூர்வமாக வெளியிட்ட ஜே.வி.பி. இதனடிப்படையில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்கப்படும் எனவும் தெரிவித்தது.

அவ்வாறு அறிவிக்கப்பட்ட 12 நிபந்தனைகளும் வருமாறு,

(12 ஆம் பக்கம் பார்க்க)

*போராளிகளின் கோவைகளைப் பார்வையிட முயன்ற*

## படையினர்-போராளிகளுக்கிடையில் வவுனியாவில் நேற்று முறுகல்

(வவுனியா)

சிறிலங்கா இராணுவத்தின் அதிவேக உந்துருளிப் படையணி படையினருக்கும் அரசியல் பணியில் ஈடுபட்டிருக்கும் போராளிகளுக்கும் இடையே நேற்று வவுனியாவில் கடும் முறுகல் ஏற்பட்டுள்ளது.

வைரவப்புளியங்குளத்தில் உள்ள புளொட் அலுவலகம் முன்பாக நின்ற அதிவேக உந்துருளிப் படையணி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பியுடன் இணைவதை எதிர்க்கவில்லை சு.கட்சி கொள்கையை தாரைவார்க்கக்கூடாது

### சனாதிபதி சந்திரிகா அறிவிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பி.க்கும் இடையில் கூட்டணி ஒன்று உருவாக்குவது ஒரு நல்ல யோசனை என்றும், சகல கட்சிகளையும் ஒருங்கிணைத்துச் செல்லுதல் தனது கொள்கை என்றும் சனாதிபதி சந்திரிகா குறிப்பிட்டுள்ளார்.

பொதுசன ஐக்கிய முன்னணியை உருவாக்கும் பொருட்டு தான் 14 கட்சிகளை இணைத்துக் கொண்டதாகவும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா அரசியல் தலைவர்களுடன் ஐ. நா. விசேட தூதுவர் பேச்சு

(கொழும்பு)

இலங்கை வந்துள்ள ஐ.நா செயலரின் விசேட பிரதிநிதியான பர்ஹூமி கொழும்பில் பிரதமர் மகிந்தராஜபக்ஷ உட்பட முக்கிய அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றார். இந்த பேச்சுவார்த்தைகளில் ஐக்கிய நாடுகள் சபை இலங்கை இனப் பிரச்சினை தீர்வு முயற்சியில் ஈடுபடுவது குறித்து அரசியல் கட்சிகளின் கருத்துக் களையும் அறிந்து வருவதாகத் தெரிவிக்கப் படுகின்றது. ஐந்து நாள் பயணத்தை முடித்துக் கொண்டு அமெரிக்கா செல்லவுள்ள பர்ஹூமி இலங்கை விஜயம் குறித்த விசேட அறிக்கை ஒன்றை ஐக்கிய நாடுகளின் செயலாளரிடம் கையளிக்கவுள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

### யாரை ஆதரிப்பது இன்று முடிவு

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இன்றும் நாளையும் கொழும்பில் விசேட உயர்பீடக் கூட்டத்தைக் கூட்டவுள்ளது. சனாதிபதித்தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்தக் கூட்டத்திற்கு வடக்கு கிழக்கு மாவட்டங்களின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### சிப்பாய் மரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனை வீதி சித்தாண்டியில் நேற்று முன்தினம் இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கான சிறிலங்கா இராணுவச் சிப்பாய் நேற்று பொலநறுவை வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

முறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாமில் பணியாற்றும் குறிப்பிட்ட இராணுவச் சிப்பாய் வீதிக் கண்காணிப்பு நடவடிக்கை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சொந்த இடத்தில் மீளக்குடியமர நடவடிக்கை எடுக்குக! கண்காணிப்புக் குழுவிடம் வலி-வடக்கு மக்கள் மகஜர்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து நல்லாகம் நீதிமன்ற அகதிமுகாமில் வாழ்ந்து வரும் மக்கள் தம்மை தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்த உடன் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமெனக் கோரி இலங்கை யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவினரிடம் மகஜர்களைக் கையளித்துள்ளனர்.

நேற்றுக்காலை இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ் .மாவட்ட செயலகத்தில் வைத்தே இம் மகஜர்கள் கையளிக்கப்பட்டுள்ளன. இதில் வலி-வடக்கில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் சார்பாக 70 மகஜர்கள் கையளிக்கப் பட்டுள்ளன.

கடந்த 14 ஆண்டுகாலமாக இடம் பெயர்ந்து அவலவாழ்வு வாழ்ந்து வரும் தம்மை யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னரும் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. யுத்த நிறுத்தம் ஏற்பட்ட பின்னரும் தமது ஊர்கள் இராணுவத்தின் பிடியில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அமெ.வில் சூறாவளியில் பாதிப்புற்றோருக்கு த.பு.கழகம் 35 ஆயிரம் டொலர்கள் திரட்ட முடிவு

அமெரிக்காவைத் தாக்கி ஆயிரக் கணக்கான உயிர்களைப் பலிகொண்ட கொடும் சூறாவளியான கற்றினாவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதியுதவி வழங்குமாறு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் இணையத்தளம் மூலம் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு அமெரிக்க மக்கள் அளித்த பாரிய உதவிகளை நினைவு கூரும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தற்போது கற்றினாவால் பாதிக்கப்பட்ட அமெரிக்க மக்களுக்கு உதவுகிற வகையில் இந்த நிதி உதவியை அளிக்குமாறு கேட்டுக் கொள்வதாகவும் அதன் வேண்டுகோள் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழ்நெற் இணையத்தளத்துக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தலைவர் வைத்தியர் ரஞ்சிதன் அளித்த நேர்காணலில், கற்றினா நிதி உதவியாக நாம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### கைக்குண்டுத் தாக்குதல் இருவர் பலி

பாணந்துறையில்நேற்றுப் பிற்பகல் நடந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தில் இருவர் கொல்லப் பட்டுள்ளனர்.

பாணந்துறை வேகட பிரதேசத்திலுள்ள வீடொன்றின் மீது பிற்பகல் 3.15 மணியளவில் இனந் தெரியாத சிலர் மேற்கொண்ட கைக்குண்டுத்தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் ஒன்பது பேர் காயமடைந்துமுள்ளனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

### பாராளுமன்று கலைக்கப்படும்

(கொழும்பு)

சீன விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியுள்ள சனாதிபதி பாராளுமன்றத்தை விரைவில் கலைக்கவுள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார். ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தை கொண்டிருக்கவில்லை

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வரிவிளம்பரம்

## காணி விற்பனைக்கு

கனகபுரம்,பிரதானவீதி,புதுமுறிப்பில் உள்ள பயன்தரக்கூடிய ஒரு ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. வர்த்தக நிலையம், மலசலகூடம், வீடு ஆகியவற்றுடன் உண்டு.
தொடர்புகொள்ள வேண்டியது.
இந்திரன்கடை, புதுமுறிப்பு. (6685)

## பொத்தகசாலைக்கு ஆள் தேவை

வன்னிப்பகுதியில் உள்ள அறிவமுது பொத்தகசாலையில் பணிபுரிய ஆண்கள் தேவை. கல்வித்தகைமையுடன் கிளிநொச்சி அறிவமுதுக்கு வரவும். உணவு, தங்குமிட வசதி உண்டு (6684)

## விற்பனைக்குண்டு

அரிசிஆலை பாவனை இயந்திரங்களான 16Hp இயந்திரம், NO 7 கல்லர், சோமசினி, 12" கிறைண்டர்02 என்பன உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு-கயற்கண்ணி அரிசி ஆலை, D10 உருத்திரபுரம். (6681)

## தவறவிடப்பட்டது

திருமுறிகண்டியைச் சேர்ந்த சிதம்பரம் தங்கசாமியின் "பொக்கெட்டயறியும்"தேசிய அடையாள அட்டையும் கிளிநொச்சி பேருந்து நிலையத்தில் 31.08.2005 அன்று தவறவிடப்பட்டது. கண்டெடுத்தோர் கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் அல்லது கிளிநொச்சி கல்வித்திணைக்களத்தில் ஒப்படைக்கவும்.
தகவல்:-சி.தங்கசாமி. (6688)

## காணி பகுதிநாள் விசாரணை

(அலுவலக செய்தியாளர்)
கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக காணி அலுவலகத்தில் எதிர்வரும் ஒன்பதாம் திகதியன்று அம்பாள்குளம் கிராமமக்களுடைய காணிப்பிரச்சினைகள் சம்பந்தமான காணி பகுதிநாள் விசாரணைகள் இடம்பெறவுள்ளன.

கரைச்சிப் பிரதேச செயலக காணி அலுவலகத்தில் வைத்து அன்றைய தினம் நடைபெறவுள்ள காணி பகுதிநாள் விசாரணைகள் அம்பாள்குளம் கிராமத்தைச் சேர்ந்த காணி சம்பந்தமான நடவடிக்கையினை மேற்கொள்பவர்கள் காணி சம்பந்தமான ஆவணங்கள், தேசிய அடையாள அட்டை என்பனவற்றுடன் அன்றைய தினம் சமுகமளிக்கும் வண்ணம் கரைச்சிப்பிரதேச செயலகக் காணி அலுவலர் செ. ஸ்ரீரெங்கநாதன் கேட்டுக்கொண்டுள்ளார்.
(சோ)

## தேவை

**1. சமையலாளர்**

அனுபவம் வாய்ந்த சமையலாளர் வார நாட்களில் சமுகம் தரவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**2. வாடகைக்கு வீடு**

கிளிநொச்சி நகரில் இருந்து 2 கிலோ மீற்றருக்கு உட்பட்ட பகுதியில் வாடகைக்கு வீடு தேவை. நேரிலோ அல்லது 021-2285875 இலக்கத் தொலைபேசி மூலமோ அல்லது கடிதம் மூலமோ தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்,
வன்னி தொழில்நுட்ப நிறுவகம்,
A-9 சாலை கிளிநொச்சி.

(சி.12676)

## கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி

நீகோட் {NECORD} கருத்திட்ட அனுசரணையுடன் அமைக்கப்படும் கட்டடத்தொகுதிக்கான

## அடிக்கல் நாட்டும் வைபவம்

**காலம்:-** 06.09.2005, செவ்வாய்க்கிழமை (இன்று)

**நேரம்:-** மு.ப.10.00 மணி

**இடம்:-** கல்லூரி வளாகம்

**இந்நிகழ்விற்கு வருகைதந்து நிகழ்வை சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.**

**கிளி/மத்தியகல்லூரிச் சமூகம்**

(சி.12674)

## வடமராட்சி கிழக்கில் வீடுகள், மலசலகூடம், கிணறுகள் அமைப்பதற்கான

care

## கேள்வி கோரல்

வடமராட்சி கிழக்கில் வெற்றிலைக்கேணி கிராமசேவகர் பிரிவில் விநாயகபுரக்கிராமத்தில் சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள், மலசலகூடங்கள், கிணறுகள் அமைப்பதற்கு விண்ணப்பங்கள் சர்வதேசம் கெயர் நிறுவனம் கிளிநொச்சியினால் கோரப்படுகின்றன. அக்கேள்விக்கு பெறுமதி சேர்வரியில் தங்கள் பெயரைப் பதிவு செய்து (VAT) இலக்கத்தினைப் பெற்றுக்கொண்டதும் இலங்கை தேசிய நிர்மாணிகள் ஒப்பந்தக்காரர் சங்கத்தில்(ICTAD) நிலைக்கு மேற்பட்ட உறுப்பினருமாகிய தனிப்பட்ட ஒப்பந்தக் காரர்களும்/நிறுவனங்களும்/சங்கங்களும் மட்டுமே கேள்வி கோரமுடியும்.

இது சம்பந்தமான விபரங்கள் அலுவலக நேரத்தில் கெயர் சர்வதேசம் கிளிநொச்சியில் பெற்றுக்கொள்ள முடியும்.

கேள்விப்பத்திரங்கள் 07.09.2005 காலை 10.00 மணியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் முடிவுநாள் 17.09.2005 காலை 10.00 மணிவரை.

**கெயர் சர்வதேசம்,**
**பழைய தபால் நிலையம்,**
**கண்டிவீதி,**
**பரந்தன்,**
**கிளிநொச்சி.**

(சி.12676)

## மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகம்
## கச்சேரி, கிளிநொச்சி.

## தரவு நிரற்படுத்துனர் பதவி வெற்றிடத்தினை நிரப்புவதற்கான விண்ணப்பம் கோருதல்

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் உள்ள மா.பு.பு. செயலகத்தில் தரவு நிரற்படுத்துனர் (அமைய) பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்குத் தகுதியானவர்களிடமிருந்து 15.09.2005 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் "அரசாங்க அதிபர், கச்சேரி, கிளிநொச்சி " எனும் முகவரிக்கு, முடிவுத் திகதியான 15.09.2005இற்கு முன்னதாக விண்ணப்பங்களை பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்க வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தவறாது "ம.பு.பு செயலகத்தில் தரவு நிரற்படுத்துனர் பதவிக்கான விண்ணப்பம்" என பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.

**தகைமைகள்:-**

மொழி,கணிதம்/தூயகணிதம்/ஆரம்பகணிதம், பௌதீகவியல்/ விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றில் திறமைச்சித்தியுடன் 06 பாடங்களில் இரண்டிற்கு மேற்படாத அமர்வில் கல்விப் பொதுத்தராதர சாதாரண பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

மொழி,கணிதம்/ எண்கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் அடங்கலாக ஐந்து பாடங்களில் A அல்லது B திறமைச்சித்தியுடன் 06 பாடங்களில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் புதிய பாடத்திட்டத்தில் கல்விப் பொதுத்தராதர சாதாரண பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**இத்துடன்**

பல்கலைக்கழகத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தாபனம் ஒன்றில் பின்வரும் பகுதிகளில் கணினிப் பயிற்சி பெற்றதற்கான சான்றிதல் இருத்தல் வேண்டும்.

1.Windows Operating Systems.
2.Microsoft Word.
3.Microsoft Excel.
4.Microsoft Access
5.Internet&E'Mail.

இத்துடன் கணினி ஒன்றினை கையாளக்கூடிய திறமையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**சம்பளம்:-** நாளொன்றுக்கு ரூபா 285.00உம் இதரபடிகளும். 2006.01.01.இலிருந்து ரூபா 310.00 உம் இதரபடிகளும்.

**வயதெல்லை:-** 21-35 வயதிற்குள் இருத்தல் வேண்டும்.

*கிளிநொச்சி மாவட்டத்தை நிரந்தர வசிப்பிடமாகக்கொண்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**தி.இராசநாயகம்,**
**அரசாங்க அதிபர்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**

(சி-12679)

## துயர் பகிர்கின்றோம்

**கிளிநொச்சி பனை,தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர் திருமதி.குணரத்தினம் வசந்தி அவர்களின் அன்புத்தந்தை மறைவுச்செய்தி கேட்டு பேரதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம்.**

**அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

தலைவர்/பொதுமுகாமையாளர்,
பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
அங்கத்தவர்கள்,
கிளி.ப.தெ.வ.அ.கூ.சங்கம்,
கிளிநொச்சி.

(சி. 12678)

## சாவு அறிவித்தல்

## தேவகுமார் சுமன்

கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும் திருநாவற்குளம் இலக்கம் 305 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட தேவகுமார் சுமன் 03.09.2005 அன்று அதிகாலை ஐந்து மணியளவில் அகால சாவடைந்துள்ளார். அன்னார் தேவகுமார் கலாராணியின் அன்பு மகனும், சுதர்சன் (வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவனும்), சுகன்ஜா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஜீவானந்தம் (ஜேர்மனி), சந்திரகுமார் (சுவிஸ்), செல்வராணி (ஜேர்மனி), நகுலேஸ்வரி (சுவிஸ்), தியாகராசா, சரோஜினிதேவி ஆகியோரின் மருமகனும், நாகராசா, விமலாதேவி, தயாபரன், பாக்கியம் ஆகியோரின் பேரமகனும், ரஜீவ் (சுவிஸ்), தயா (சுவிஸ்), டினேஷ் (சுவிஸ்) சிந்துஷன் (ஜேர்மனி), அனுஷன் (ஜேர்மனி), பிரசாந் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை 06.09.2005 இன்று (செவ்வாய்க்கிழமை) காலை பத்து மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாண்டிக்குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

திருநகர்,
கிளிநொச்சி.

தகவல்:-
சிறி குடும்பத்தினர்.
(சித்தப்பா)

(சி. 12680)

# ஜப்பானில் 'நாபி' சூறாவளியால் கடும்மழை: வெள்ளப்பெருக்கு

(டோக்கியோ)

ஜப்பானின் தென்மேற்குப் பகுதியில் "நாபி" என்ற சக்திவாய்ந்த சூறாவளி நேற்றுக்காலை வீசியதனால் கடும் மழையும், வெள்ளமும் ஏற்பட்டுள்ளது.

டோக்கியோவிலும் இடியுடன் கூடியமழை பெய்ததாக தெரிவிக்கப்படுகின்றது. ஒரு மணிநேரத்தில் 110 மில்லிமீற்றர் மழை பெய்துள்ளதாக டோக்கியோ வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

பெருவெள்ளம் காரணமாக இருவர் இறந்துள்ளனர். ஆயிரக்கணக்கான வீடுகளுக்கு மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் நெடுஞ்சாலைகள் மூடப்பட்டுள்ளதோடு ரயில் வண்டிகள் தாமதமாகவே சேவைகளை மேற்கொண்டு வருவதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

# சூறாவளியால் பாதிக்கப்பட்ட நியூ ஓர்லியன்சில் தொடரும் மீட்புப்பணி ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பலியானதை ஒப்புக்கொண்டது அமெரிக்கா

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் வரலாறுகாணாத வகையில் கற்றினா சூறாவளிப் புயலால் பாதிப்பிற்குள்ளான நியூ ஓர்லியன்ஸ் நகரில் மீட்புப்பணிகள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றன.

ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்ததை அமெரிக்க அரசு முதன் முறையாக ஒப்புக்கொண்டுள்ளது.

மீட்புநிவாரணப் பணிகளில் உதவுமாறு ஐ.நா.வையும் அமெரிக்கா கேட்டுள்ளது.நியூ ஓர்லியன்சில் மூடப்பட்டிருக்கும் கடைகளில் இருந்து பொருட்களை சூறையாட முயன்ற ஐந்து பேரை அமெரிக்கப்பொலிசார் சுட்டுக்கொன்றுள்ளனர்.



இதற்கிடையே பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு நிவாரணப் பணிகளில் உதவுவதற்காக தனது இராணுவத்தை அனுப்ப இந்தியா முன்வந்துள்ளது. இந்தியாவில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட சுனாமியினால் வரலாறு காணாத பாதிப்பின் போது மீட்புப்பணியில் ஈடுபட்ட அனுபவம் கொண்ட இந்திய இராணுவம் நியூ ஓர்லியன்ஸ் நகரில் மீட்பு நிவாரண நடவடிக்கையில் ஈடுபட முடியும் என்று இந்திய மத்தியரசு அறிவித்துள்ளது.

# குடியிருப்புப் பகுதியில் விமானம் வீழ்ந்து நொருங்கியது இந்தோனேஷியாவில் 146 இற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு

(ஜகார்த்தா)

**இந்தோனேஷிய பயணிகள் விமானமொன்று குடியிருப்புப் பகுதியில் விழுந்து நொருங்கியதில் 146இற்கும் மேற்பட்ட பயணிகள் பலியாகியுள்ளனர்.**



அந் நாட்டின் மேடான் விமான நிலையத்திலிருந்து ஜகார்த்தா புறப்பட்ட விமானம் ஒரு நிமிடத்தில் தீப்பிடித்து எரிந்து விழுந்ததாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

குடியிருப்புப் பகுதியில் விமானம் விழுந்து நொருங்கியதாகவும் அந்த விமானத்தில் 109 பேர் பயணம் செய்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் எத்தனை பேர் உயிரிழந்தார்கள் என்பதை உடனடியாக தெரிவிக்க இயலாது என்று இந்தோனேஷிய போக்குவரத்துத் துறைஅமைச்சர் கூறியுள்ளார்.

மீட்புப்பணிக்குழு விபத்து நடந்த இடத்திற்கு விரைந்துள்ளது.

விமானம் குடியிருப்புப்பகுதியில் விழுந்தமையினால் அப்பிரதேசத்தைச் சேர்ந்த குறைந்தது 30 பேர் பலியாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படு கின்றது.



ரஷ்ய தலைநகர் மொஸ்கோ நகர தினம் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. இதை யொட்டி மொஸ்கோ நகரம் வண்ண மயமாகக் காட்சியளிக்கின்றது.

# நேபாள முன்னாள் பிரதமர் கைது

(காத்மண்டு)

நேபாளத்தில் அரசியல் கட்சிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கக் கோரி நடந்த பேரணியின் போது நேபாள முன்னாள் பிரதமர் கிரிஜா பிரசாத் கொய்ரலா (வயது-83) உட்பட பல தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்.

பேரணியில் பங்கேற்றவர்களைக் கலைக்க பொலிசார் கண்ணீர்ப்பு கைக் குண்டுகளை விசி கூட்டத்தினரைக் கலைத்தனர். இதில் லேசாக காயமடைந்த கொய்ர லா மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்.



இது என்ன மனிதக் மாமிசக் கடை என நினைக்கத் தோன்றுகிறதா? இல்லை. தாய் லாந்தின் பாங்கொக் அருகே ரத்சாபுரியில் மனித உடல் உறுப்புக்கள் போல ரொட்டி தயார் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. மனிதனை மனிதனே அடித்துச் சாப்பிடும் காலம் வருகிறதோ? இல்லையோ ஆனால் இப்படி சாப்பிட வேண்டும் என்ற எண்ணம் வந்தது. யோசிக்க வேண்டிய விடயம் தான்.

# அமெரிக்க உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி மரணம்

(வோஷிங்டன்)

புற்று நோயால் அவதிப்பட்டு வந்த அமெரிக்க உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி வில்லியம் ரென்கியுஸ்ட் கடந்த சனியன்று இரவு காலமானார். இந்தத் தகவலை அவரது பெண் செய்தித் தொடர்பாளர் கேத் அர்பெர்க் அறிவித்தார்.


அமெரிக்க உச்ச நீதிமன்றின் தலைமை நீதிபதியான வில்லியம் ரென்கியுஸ்ட் கடந்த ஒக்ரோபர் முதல் ஒரு வருடமாக தொண்டைப் புற்று நோயால் அவதிப்பட்டு வந்தார். இதையடுத்து விர்ஜினா மாகாணத்தின் அர்லிங்டோன் என்ற இடத்தில் உள்ள அவரது வீட்டில் இருந்தபடி சிகிச்சை பெற்று வந்தார்.

கடந்த நான்கு நாட்களுக்கு முன்பு அவரது உடல் நிலை மிகவும் மோசமானது. இதைத் தொடர்ந்து கடந்த சனியன்று இரவு அவர் காலமானார். இந்தத் தகவலை அவரது செய்தித் தொடர்பாளர் கேத் அர்பெர்க் நேற்று அறிவித்தார்.

உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியான வில்லியம் ரென்கியுஸ்ட்டின் மறைவுக்கு அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்புஷ் மற்றும் அவரது மனைவி இரங்கல் தெரிவித்தனர். வில்லியம் ரென் கியுஸ்ட்டின் மறைவு அமெரிக்க நீதித்துறைக்கு ஏற்பட்ட மிகப் பெரிய இழப்பு என்று ஜோர்ஜ் புஷ் கூறினார். 80 வயதான வில்லியம் ரென் கியுஸ்ட் 1969 ஆம் ஆண்டு நிக்சன் ஆட்சிக் காலத்தில் நீதித்துறையில் சேர்ந்தார். கடந்த 1986 ஆம் ஆண்டு முன்னாள் அமெரிக்க அதிபர் ரொனால்ட் ரீகன் இவரை அமெரிக்க உச்ச நீதிமன்றின் 16 ஆவது தலைமை நீதிபதியாக நியமித்தார்.

வில்லியம் ரென்கியுஸ்ட் தனது பணிக் காலத்தில் அமெரிக்கப் பெண்களுக்கு கருக்கலைப்பு செய்யும் அடிப்படை உரிமை உட்பட பல்வேறு பரபரப்பான தீர்ப்புக்களை வழங்கியவர்.

முன்னாள் அதிபர் பில்கிளிங்டனுக்கு எதிராக கடந்த 1999 ஆம் ஆண்டு அமெரிக்க செனட் கூட்டத்தில் கண்டன தீர்மானம் கொண்டு வரப்பட்டபோது வில்லியம் ரென்கியுஸ்ட் நீதித்துறை அதிகாரியாக இருந்தார்.



கற்றினா சூறாவளியால் பாதிக்கப்பட்ட அமெரிக்க கறுப்பினத்தவர் ஒருவர் தனது குழந்தையை கண்டியணைத்து கதறியழுவதையும், அவரை அமெரிக்க வீரர் ஒருவர் அவ் விடத்தில் இருந்து அப்புறப்படுத்த முற்படும் காட்சி.

# ரஷ்ய கடற்படைத் தளபதி பதவியில் இருந்து திடீர் நீக்கம்

ரஷ்யாவின் கப்பல் படைத்தளபதியாக இருந்த விளாடிமிர் குரோயி டொவ் பதவிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். அதிபர் புட்டின் இந்த திடீர் நடவடிக்கையை எடுத்தார். புதிய கப்பல் படைத்தளபதியாக துணைத்தளபதி விளாடிமிர் மகோரின்கை நியமிக்கப்பட்டுள்ளார்.

சமீபகாலமாக ரஷ்ய கப்பல் படையைச் சேர்ந்த நீர் மூழ்கிக்கப்பல்கள் தொடர்ந்து விபத்தில் சிக்கியமை இவரது திடீர் பதவி நீக்கத்துக்கு காரணமாக அமையலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# மீட்புப் பணியில் கறுப்பர்களுக்கு பாகுபாடா முற்றாக மறுக்கிறார் கொண்டலிசா ரைஸ்

(வோஷிங்டன்)

சூறாவளித் தாக்குதலுக்குள்ளான பகுதிகளில் மீட்பு நிவாரண உதவி அளிப்பதில் கறுப்பின மக்களுக்கு எதிராக நிறப்பாகுபாடு காட்டப்படுகின்றது என்ற குற்றச்சாட்டை அமெரிக்க நிர்வாகம் மறுத்துள்ளது.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கொண்டலிசாரைஸ் வோஷிங்டனில் நிருபர்களிடம் சனிக்கிழமை கூறியதாவது:-

சூறாவளியால் பாதிக்கப்பட்டவர்களில் யாருக்கு உதவி செய்வது யாருக்கு உதவி செய்யக் கூடாது என்பது நிறத்தை அடிப்படையாக வைத்து முடிவு செய்யப்படுகின்றது என்ற குற்றச்சாட்டை நான் மறுக்கிறேன். அமெரிக்கர்கள் அனைவரும் மிகுந்த தாராள மனது கொண்டவர்கள்.

இது தொடர்பாக கறுப்பின மக்கள் மத்தியில் எழுந்துள்ள அச்சத்தைப் போக்கும் வகையில் அமெரிக்க கறுப்பின எம்.பிக்களை நான் வெள்ளிக்கிழமை சந்தித்துப் பேசினேன் என்றார்.

எனினும் சூறாவளித் தாக்குதலால் மிக மோசமாகப் பாதிக்கப்படிருப்பவர்கள் நியூ ஓர்லியன்ஸ் பகுதியில் உள்ள கறுப்பின மக்கள் தான் என்று பத்திரிகைகள் எழுதுகின்றன.

பொதுவாக கறுப்பர்களை விட பெரும்பாலான வெள்ளை அமெரிக்கர்கள் வசதி படைத்தவர்கள் என்பதால் கார்கள் பேருந்துகள் மற்ற வாகனங்கள் மூலம் அவர்கள் அப் பகுதியை விட்டு உடனே வெளியேறி விட்டனர். ஆனால் அந்த வசதி இல்லாததால் அங்கேயே இருந்து அவதிப்பட வேண்டிய ஆபத்தை எதிர்நோக்க வேண்டிய நிலை கறுப்பின மக்களுக்கு ஏற்பட்டுள்ளது என்றார்.

# வவுனியா எழுச்சிப் பிரகடனத்திற்கு வலுச்சேர்க்க அனைவரும் ஒன்றுதிரண்டு குரல்கொடுப்போம்

-முல்லை.கல்வி மேம்பாட்டு பேரவை அழைப்பு

(முல்லை)

**வவுனியா தமிழ்தேசிய எழுச்சிப் பிரகடனத்திற்கு வலுச்சேர்க்க முல்லையில் நடைபெறவுள்ள எழுச்சிப் பிரகடன நிகழ்வில் அனைவரும் ஒன்றுதிரண்டு குரல்கொடுப்போம் என முல்லை. மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.**

இது தொடர்பாக பேரவை விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது; வவுனியா பிரகடனத்துக்கு வலுக் கொடுப்போம் வாரீர்.30 ஆண்டுகாலப் போரும் அழிவுகளும் எங்களை வருத்தியதை விட ஆழிப்பேரலை எங்களை அழித்ததை விட சமாதான காலத்தில் சிங்கள அரசு நடந்து கொண்ட விதமும் பொதுக்கட்டமைப்பை முடக்குவதற்கு அரசு செய்த நடவடிக்கைகளையும் எங்களால் என்றும் மறக்க முடியாது.

இவ்வாறான எங்களின் உணர்வுகளை, எழுச்சியை அறிய வேண்டிய பொறுப்பு சர்வதேசத்திடமே உண்டு என்பதால் வவுனியாவில் அப்பிரகடனத்தை உரத்துச் சொன்னோம். அந்தப் பிரகடனத்தை ஆதரித்து முல்லை. மாவட்டத்திலும் எங்கள் குரல் வானத்தையும் அதிரவைக்கப் போகிறது.

எதிர்வரும் 14.09.2005 புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டு அரங்கில் முல்லை. மாவட்ட மக்கள் அனைவரும் ஒன்று கூடி வவுனியா பிரகடனத்துக்கு வலுவூட்டும் செயலை எங்கள் பேரவை வாழ்த்துகின்றது மட்டுமல்ல வலுவூட்டவும் அனைவரும் களத்தில் இறங்கிவிட்டார்கள். மக்கள் வேறு புலிகள் வேறு என்று மதிகெட்டவார்த்தைபேசும் சிங்களஅரசின் வார்த்தைகளுக்கு மூடுவிழா செய்யவேண்டும் மக்களும் புலிகளும் ஒன்று என்பதை சர்வதேசம் உணர வேண்டும். அதற்கு எங்களின் எழுச்சியே சர்வதேசத்துக்கு நல்ல பதில்களைக் கொடுக்கும் என நம்புகின்றோம்.

தடுமாறும் பேச்சினால் பயனேதும் இல்லை தமிழீழமே எங்கள் மூச்சு என்றுகுறிப்பிட்டுள்ளது.

## இருநூறு வீடுகள் அமைக்க உதவி

வடக்கு கிழக்கு மாகாண சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வவுனியாவில் இருநூறு வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

மீளக்குடியமரவிருக்கும் குடும்பங்களுக்கு வழங்கவென இதன் ஆரம்பகட்டவேலைகளுக்காக ஐம்பதுமில்லியன்ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக வவுனியா அரச அதிபர் சண்முகம் தெரிவித்துள்ளார்.

செட்டிகுளம் பிரதேசசெயலக பிரிவில் ஐம்பது வீடுகளும் வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலகப் பிரிவில் எழுபது வீடுகளும் வவுனியா பிரதேசசெயலகப் பிரிவில் எண்பது வீடுகளும் அமைக்கப்படவுள்ளன.

## நலன்புரி நிலையத்திலிருந்து 5 குடும்பங்கள் கிளி.வருகை

(அலுவலக செய்தியாளர்)

வவுனியா பூந்தோட்டம் நலன்புரி நிலையத்திலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை ஐந்து குடும்பங்கள் கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தினை வந்து சேர்ந்துள்ளன.

வவுனியா மாவட்ட அரசஅதிபரின் ஏற்பாட்டில் வாகனங்கள் மூலம் வவுனியா பூந்தோட்ட நலன்புரி நிலையத்திலிருந்து மேற்படி ஐந்து குடும்பங்களைச் சேர்ந்த 20 உறுப்பினர்களும் கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசசெயலகத்திற்கு அழைத்து வரப்பட்டனர். கிளி.கரைச்சிபிரதேச செயலகத்தினால் மேற்படி குடும்பங்களுக்கு சமைத்த உணவுகள் வழங்கப்பட்டதுடன் அவர்களது சொந்தக்கிராமங்களுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளனர். இக் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் யு.என்.எச்.சி. ஆர் நிறுவனத்தினரால் ஒவ்வொரு கூரை விரிப்புகள்வழங்கப் பெற்றன. (சோ)

## சுனாமியால் பாதிப்புற்ற மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் வழங்கல்

(முல்லை)

முல்லைத்தீவில் சுனாமியினால் பாதிக்கப்பட்டமீனவர்களுக்கு ஜி.ரி. இசற் மற்றும் ரெக்நிறுவனமும் இணைந்த நிதி உதவியில் முல்லை. மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தினால் ஒரு தொகுதி மீன்பிடி உபகரணங்கள் நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்கு சமாசத்தில் வைத்து வழங்கப்பட்டன.

முல்லை. மாவட்டகடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத் தலைவர் அமரியராசா தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து தமிழீழத் தேசியக்கொடியினை கடற்புலிகளின் முல்லை. மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் மா. ரங்கன் ஏற்றினார்.

தொடர்ந்து கருத்துரைகளை ரெக்நிறுவனத்தைச் சேர்ந்த பேராசிரியர் நவரட்ணராஜா, ஜி.ரி.இசற் நிறுவன சிரேஷ்ர ஆலோசகர் ஏன் கங் கரத்வா, மல்ரிசார் சர்வதேசப் பிரதி நிதி டொறத்சிஸ்மி, பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், முல்லை. மாவட்டகடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் மா.ரங்கன் ஆகியோர் நிகழ்த்தினர்கள்.

தொடர்ந்து 100மீன்பிடிப்படகுகள், வெளிஇணைப்பு இயந்திரங்கள், வலைகள், என்பவற்றில் 40 படகுகள் 40வெளிஇணைப்பு இயந்திரங் களும், வலைகளும் வருகை தந்திருந்த பிரமுகர்களால் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் க.தொ.கூ. ச.சமாசப் பணிப்பாளர்கள், கிளைச்சங்கப்பிரதிநிதிகள்,ஜி.ரி.இசற் நிறுவனப்பிரதிநிதிகள், மீனவர்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (20)

## முல்லை. மாவட்ட வைத்தியசாலையில் நோயாளர் விடுதி திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

முல்லை. மாவட்ட வைத்தியசாலைக்கானநோயாளர் விடுதி நேற்று முன்தினம் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்வு முல்லை. மாவட்ட வைத்திய அதிகாரி ஜி.சி.தர்மேந்திரா தலைமையில் இடம்பெற்றது இந் நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக மங்கலவிளக்கினை வைத்திய கலாநிதி சண்முகநாதன்,கட்டடபொறியியலாளர் ஜெயசீலன், ஜேர்மன் வைத்தியர் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.தொடர்ந்து தமிழீழத் தேசியக்கொடியினை கடற்புலிகளின் முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் மா.ரங்கன் ஏற்றிவைத்தார்.

தேசியக் கொடியேற்றத்தைத் தொடர்ந்து கட்டடத்திற்கான பெயர்ப்பலகையினை முல்லை மாவட்ட பிரதி மாகாண சுகாதாரசேவைப்பணிப்பாளர் வைத்தியகலாநிதி து.வி.ஜெயகுலராஜா திரைநீக்கம்செய்து வைக்க, நோயாளர் விடுதிக்கட்டடத்தினைமுல்லை மாவட்ட அரசாங்க அதிபர் இமெல்டாசுகுமார் நாடாவினை வெட்டித் திறந்துவைத்தார். தொடர்ந்து அதி தீவிர சிகிச்சைப் பிரிவினை தமிழீழ சுகாதார சேவைப்பணிப்பாளர் வைத்திய




கலாநிதி விக்கிரமன் திறந்துவைத்தார், பெண்களுக்கான நோயாளர் சிகிச்சை விடுதியினை வைத்தியர் உமாகாந்தன் திறந்துவைத்தார், சிறுவர்களுக்கான விடுதியினை தாய்சேய் நலவைத்தியர் சுதர்சன் திறந்துவைத்தார். "எக்ஸ்ரே" பிரிவினை பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் திறந்துவைத்தார். வரவேற்புரையினை வைத்தியசாலை அபிவிருத்திச்சபை உறுப்பினர் பாஸ்ராஜ் நிகழ்த்தினார். தொடர்ந்து வரவேற்புரை, ஆசியுரை, சிறப்புரைகள் என்பன இடம்பெற்றன.

இந் நிகழ்வில் வைத்தியசாலை பணியாளர்கள், நலன் விரும்பிகள் எனப்பலர் கலந்து கொண்டனர். (த்,20)

## கரைச்சி கிராமங்கள் தோறும் உணவுப் போசாக்கு கருத்தரங்கு

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழான உணவு போசாக்கு கருத்தரங்கு கிளிநொச்சி மாவட்ட கரைச்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராமங்கள் தோறும் இடம்பெற்று வருகின்றன.

இதன்ஆரம்பநிகழ்வு ஊற்றுப் புலம்பொதுநோக்கு மண்டபத்தில் கடந்த 23 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு கரைச்சிப் பிரதேச அபிவிருத்தி உத்தி யோகத்தர் சிவச்செல்வன் தலைமையில் இடம் பெற்றது.கரைச்சிப் பிரதேச செயலர் செல்வி க.சுலோஜினி, கிளிநொச்சி மாவட்டபிரதித்திட்டமிடல் பணிப்பாளர் குதயாரட்ணகுணசிங்கம், கிளிநொச்சி மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியகலாநிதி சுயந்தன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

இதன் வள ஆளணியினராக கிளிநொச்சி மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி சுயந்தன்,பளை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி கதிர்செல்வன். பொதுச் சுகாதார பரிசோதகர் ரவிச்சந்திரன், விவசாய போதனாசிரியர் ஜெ.கனேசலிங்கம் ஆகியோர் விரிவுரைகளை வழங்கினர். இதன்தொடர் நிகழ்வுகள் புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயத்திலும்,பாரதிபுரம்பொதுநோக்கு மண்டபத்திலும்,மலையாளபுரம் பொதுநோக்கு மண்டபத்திலும் பொன்நகர் பொதுநோக்கு மண்டபத்திலும் இடம் பெற்றன.

## நீர்த்தாங்கிகள் வழங்கல்

(மன்னார்)

பள்ளிமுனை மக்களுக்கு மேலும் ஐந்துநீர்த்தாங்கிகள் மன்னார் பிரதேசசெயலாளரால் வழங்கப் பட்டுள்ளன.

மேலும் ஐந்து நீர்த்தாங்கிகள் வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (18)

## சுனாமியால் பாதிப்புற்ற பாலங்களை திருத்தக் கோரல்

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட காரைதீவுப்பிரதேசத்திலுள்ள இரு பாலங்கள் எட்டு மாதங்களாகியும் திருத்தப்படாமையினால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகியுள்ளனர்.காரைதீவு நிந்தவூர் எல்லையிலுள்ள பாலமே இவ்வாறு பாதிக்கப்பட்டது. காரைதீவில் இருந்து நிந்த வூருக்குஉள்வழியாக செல்லும் ஒரேயொரு மார்க்கம் இப்பாலமாகும் இதுவரை அப்பாலம் திருத்தப்படாமையினால் மக்கள் ஒருகிலோ மீற்றர் சுற்றிவளைத்து பயணிக்க வேண்டியுள்ளது. காரைதீவு வடஎல்லை சித்தானைக்குட்டி வீதியிலுள்ள பாலமும் பாதிக்கப்பட்டது. சுனாமியினால் பாதிக்கப்பட்ட வீதி களுக்கு போடவென கிறவல் ஏற்றிவந்த கனரக பாரவூர்தி இப்பாலத்தை மேலும் உடைத்துள்ளது.இப்பாலம் இன்று வரை திருத்தப்படவில்லை இதனால் மக்கள் போக்குவரத்தில் அவலங்களை எதிர்கொள்கின்றனர்.

## 'விழி' மருத்துவ இதழ் வெளிவந்துள்ளது

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரின் மாதாந்த சுகாதார வெளியீடான மருத்துவ இதழ் "விழி" யைர இதழ்வெளிவந்துள்ளது.

லீஸ் மானியாசிஸ் (LEISHMANIASIS) மலேரியா தடைப்பதியலாருக்கு மற்றுமொருசவால் எனும் தலைப்புச் செய்தியுடன் மீண்டும் அச்சுறுத்தும் காசநோய் கசரோகம், தாய் மரணம், உடற்பயிற்சி, கழிவுப்பொருட்கள் மீதான சுகாதாரக் கவனிப்பு, குருதி வகைகளும், குருதிபாச்சுதலும் மற்றும் சுகாதார விழிப்புணர்வுக் கவிதைகள், கட்டுரைகளைத் தாங்கி சுகாதார மருத்துவ இதழின் வைர இதழ் (60) வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)



கடந்தவாரம் முல்லை. வெட்டுவாய்க்கால் அ.த.க.பாடசாலை சாரண மாணவர்களுக்கு சின்னம் சூட்டும் விழா நடைபெற்றது. அதில் முல்லை.மாவட்டசாரணஉதவி ஆணையாளர் வே.ஜெயம் சபாபதி முன்னிலையில் சாரண மாணவர்கள் சத்தியப்பிரமாணம் எடுப்பதையும் சின்னம் பெற்ற சாரண மாணவர்களையும் மற்றும் ஆசிரியர்களையும் படங்களில் காணலாம். (படம்.சகிலா)

## மன்னார் தே.எ.மாநாடு முன்னோடிக் கலந்துரையாடல்

மன்னாரில் எதிர்வரும் 28ஆம் திகதி நடைபெறவிருக்கும் தமிழ் தேசிய எழுச்சி மாநாடு தொடர்பான முன்னேற்பா டான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் மன்னார் பேசாலையில் இடம்பெற்றுள்ளது.

மன்னார் மாவட்ட கடற்புலிகளின் பொறுப்பாளர் அன்புராஜ் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் 150இற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டு தேசிய எழுச்சி மாநாட்டு ஒழுங்குகள் பற்றிக் கலந்துரையாடியுள்ளனர். (18)

## சட்ட விரோத மண் அகழ்வைத் தடுக்க சூழல் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்க முடிவு

(தென்மராட்சி)

**சட்ட விரோத மண் அகழ்வைத் தடுக்க கிராம அலுவலர்கள் தலைமையில் சூழல் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.**

தென்மராட்சிப் பிரதேசத்தில் சட்ட விரோதமண் அகழ்வைக் கட்டுப்படுத்த அந்தந்தப் பகுதி கிராம அலுவலர்கள் ஊடாக சூழல் பாதுகாப்புக் குழுக்களை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாக சூழல் பாதுகாப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

இப் பிரதேசத்தில் பெரும் பிரச்சினையாக உருவெடுத்து இருக்கின்ற சட்ட விரோத மண் அகழ்வே கடந்த காலங்களில் இப் பிரதேசத்தில் ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு காரணமாக இருந்ததாகவும் மற்றும் இப் பிரதேசத்தின் இயற்கை வளங்களுக்கும் சுற்றுச் சூழலுக்கும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும், எனவே இவற்றைத் தடுக்க கிராம ரீதியாக சூழல் பாதுகாப்பு அமைப்பு பாடுபடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (28)

## விவசாயப் பயிற்சி நிலையம் குடாநாட்டில் அமைக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கான விவசாயப் பயிற்சி நிலையம் ஒன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

நிகொட் திட்டத்தின் கீழ் சுமார் ஒரு கோடி ரூபா செலவில் இந்த விவசாயப் பயிற்சி நிலையம் அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டம் விவசாயிகளை அதிகமாகக் கொண்டதாகக் காணப்படுகின்ற போதும் உழைக்கும் விவசாயிகளுக்கான தொழில் சார் பயிற்சிகளை வழங்குவதற்கு ஏற்ப பயிற்சி நிலையம் ஒன்று இல்லாமை பெரும் குறைபாடாகக் காணப்பட்டது.

இந்தக் குறைபாடுகளைத் தீர்க்கும் நோக்குடனேயே இவ் விவசாயப் பயிற்சி நிலையம் நிறுவப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

## கச்சாய் கடற் கரையோர முகாம்களை பலப்படுத்துவதில் படையினர் தீவிரம்

(தென்மராட்சி)

கச்சாய் கடற்கரையோரப் படை முகாம்களை பலப்படுத்தும் நடவடிக்கைகளில் படையினர் தீவிர மாக ஈடுபட்டுவருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப் பகுதியில் கரையோரப் பகுதிகளில் இயந்திரங்கள் மூலமாக மண் அணைகள் அமைக்கப்பட்டு புதிய பல முன்னரண்கள் அமைக்கப்பட்டு வருவதுடன் முட் கம்பி வேலிகளும் பல இடங்களில் படையினரால் புனரமைக்கப்பட்டு வருவதாகவும் அத்துடன் பயிற்சி நடவடிக்கைகளிலும் படையினர் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகவும் இப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (28)

## வடமராட்சி கிழக்கு கடற்கரையோரம் வெளிச்ச வீடுகளை அமைக்க வற்புறுத்து

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு கடற்கரையோரங்களில் வெளிச்ச வீடுகள் இன்மையால் அப்பகுதி மீனவர்கள் தொழில் முடித்துக் கொண்டு கரை திரும்பும் பொழுது பெரும் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

குறிப்பாக வடமராட்சி கிழக்கு கடற்கரையோரத்தில் வெளிச்ச வீடுகள் இல்லாததினால் தாம் சென்றடைய வேண்டிய கரை எது என அறியாது வேறு இடங்களுக்கு திசைமாறிச் சென்றடையும் நிலைமை உள்ளது.

இதனால் சில வேளைகளில் சிறிலங்கா கடற்படையினரது கடற்பாதுகாப்பு வலயத்திற்குள் கூடச் சென்று அகப்பட்டுக் கொள்ளும் பரிதாப நிலைமை வடமராட்சி கிழக்கு மீனவர்களுக்குள்ளானது.

இவ்வாறாக கடற்றொழிலுக்குச் சென்று விட்டுக்கரை திரும்பும் போது வெளிச்ச வீடுகள் இன்மை காரணமாக ஏற்படும் சிக்கல்கள் குறித்து விசனம் தெரிவித்துள்ள வடமராட்சி கிழக்கு மீனவர்கள் தமது கடற்கரைப் பிரதேசத்தில் வெளிச்ச வீடுகள் நிறுவப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். (33)

## கொடிகாமம் பிரதேச செயலகம்; திட்டவரைவு அனுப்பி வைப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தை இரண்டாக பிரித்து நிர்வாக வசதிக்காக கொடிகாமத்தை தலைமையாகக் கொண்டு தனிப் பிரதேச செயலகம் அமைக்கும் திட்டம் தொடர்பான வரைவு பொது நிர்வாக உள் நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு யாழ்.அரசாங்க அதிபர் மூலமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

அறுபது கிராமஅலுவலர்களை உள்ளடக்கிய தென்மராட்சி பிரதேசம் ஒரே ஒரு பிரதேச செயலகத்தை உள்ளடக்கியதால் கிராம மக்கள் தமது தேவைகளை நிறைவுசெய்ய முடியாத சூழல் நிலவி வருவதுடன்.இருபத்து எட்டு கிராம அலுவலர்களை உள்ளடக்கியுள்ள கொடிகாமம் பிரதேசத்திற்கு தனியானதொரு பிரதேச செயலகத்தை அமைத்துத் தரும்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (28)

## இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதியிலுள்ள இந்து ஆலயங்களின் விக்கிரகங்கள் சேதம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரதேசத்தில் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள அறுபதுக்கும் மேற்பட்ட இந்து ஆலயங்களில் விக்கிரகங்கள் சேதமடைந்துள்ளதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் இராணுவ உயர் பாதுகாப்பு வலயப் பகுதியிலுள்ள அறுபதுக்கும் மேற்பட்ட இந்து ஆலயங்களில் கடந்த பல வருடங்களாக எந்த வித புனரமைப்புக்களும் மேற் கொள்ளப்படாமலும் பூசைகளை நடத்த முடியாத சூழலிலும் ஆலய கட்டடங்கள் பாதிக்கப்பட்டும் விக்கிரகங்கள் சேதமடைந்த நிலையில் இருந்து வருவதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பல ஆலய வளாகத்தினுள் புத்த கோயில்கள் படையினரால் கட்டப்பட்டு இருப்பதாகவும் இவற்றைக் கட்டுவதற்கு படையினரால் பயன்படுத்தப்பட்ட கற்கள் பெரும்பாலும் பாதிக்கப்பட்டு உடைந்து போயுள்ள ஆலயங்களில் இருந்து எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (28)

## இரண்டு வருடங்களுக்கு மேலாக நாட்டப்படாதுள்ள மின் கம்பங்கள்!

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவுக்கு மின்சாரக் கம்பங்கள் வந்து இரண்டு ஆண்டுகள் ஆகியும் வேலைகள் இன்னும் முழுமை பெறவில்லை.

புங்குடுதீவு பகுதிக்கு மின் விநியோகம் செய்வதற்கென கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கொண்டு வரப்பட்ட இருநூறுக்கும் மேற் பட்ட மின் கம்பங்களில் பல இது வரை நாட்டப்படாமையால் மின் விநியோகம் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மின் கம்பங்களை நாட்டுவதற்குரிய ஒப்பந்தக்காரர்கள் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் இப் பணிகளை முடிக்காமையால் மின் இணைப்புப் பணிகள் பாதிக்கப்பட்டு இருப்பதாகவும் இது குறித்து அதிகாரிகள் கூடுதல் கவனம் செலுத்துவதுடன் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர்களை இப் பணிகளை உடனடியாக முடித்துத்தர உத்தரவிட வேண்டும் என புங்குடுதீவு அபிவிருத்திக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. (28)

## நவீன வசதிகளுடன் நீதிமன்றக் கட்டடம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகரத்தில் நவீன வசதிகளுடன் நீதிமன்றக் கட்டடத்தை அமைக்க நகர அபிவிருத்தித் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருப்பதாகத் தெரிய வருகிறது.

தற்பொழுது இயங்கி வரும் தற்காலிக நீதிமன்றக் கட்டடம் போதிய வசதிகள் ஏதுவும் இன்றி உள்ளதால் நிரந்தரமாகப் புதிய நீதிமன்ற கட்டடத்தை பொருத்தமான ஒரு இடத்தில் அமைக்கும் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டு இருப்பதாகவும் பழைய நீதிமன்றம் இருந்த இடத்தில் சாவகச்சேரி நகரசபை கட்டடம் அமைக்க உத்தேசிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மற்றும் பழைய நீதிமன்றக் கட்டட இடிபாடுகள் முற்றாய் அகற்றப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. (28)

## மின்சாரம் வழங்க வேண்டுகோள்!

(தென்மராட்சி)

வரணிப் பகுதியில் இருந்து குடமியன், நாவற்காடு மற்றும் வடக்கு மிருசுவில் கிராமங்களுக்கு மின்சாரம் வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென இக் கிராம மக்கள் கூட்டாக பல்வேறு தரப்பினரிடம் வேண்டுகோள் விடுத்திருப்பதாக தெரிய வருகிறது.

ஐயாயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் செறிந்து வாழும் இக் கிராமங்கள் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக மின்சார வசதிகள் அற்ற நிலையில் இருந்து வருவதுடன் மின்சார வசதிகள் செய்யப்படுமெனில் இக் கிராமங்கள் மேலும் தொழில் ரீதியாக [illegible] கல்வி ரீதியாகவும் பொருளாதா[illegible] முன்னேற்றம் ஏற்படும் என்று தமது கோரிக்கையில் மக்கள் தெரிவித்துள்ளனர். (28)

## மந்திகை வைத்தியசாலையில் வைத்தியர்கள் பற்றாக்குறை

(யாழ்ப்பாணம்)

யாழ். மந்திகை வைத்தியசாலையில் வைத்தியர்கள் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக உள்ளதாக என்று அவ் வைத்தியசாலையின் நிர்வாக அதிகாரிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மந்திகை வைத்தியசாலையில் சிகிச்சை பெற வரும் நோயாளர்களின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு இங்கு குறைந்த பட்சம் 15 வைத்தியர்களாவது சேவையாற்ற வேண்டிய அவசியப்பாடுள்ளது.

எனினும் இவ் வைத்தியசாலையில் தற்போது 5 வைத்தியர்கள் மட்டுமே கடமையில் இருக்கின்றனர்.

இதனால் வைத்தியசாலைக்கு சிகிச்சை பெற வரும் நோயாளர்களுக்கு திருப்திகரமான வைத்திய சேவைகளை வழங்கு வதில் பல இடர் பாடுகள் இருப்பதாக மந்திகை வைத்தியசாலை நிர்வாகத் தினர் விசனம் தெரிவித்துள்ளனர். (33)

## கிராம சேவை உத்தியோகத்தர் வெற்றிடங்களை நிரப்பக் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பிரதேச கடற்கரையோர கிராமங்களில் நிலவும் கிராம உத்தியோகத்தர் பற்றாக்குறைகளைப் போக்க உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று வடமராட்சியில் உள்ள கடற் றொழிலாளர்கள் சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

வடமராட்சியில் உள்ள கடற்கரையோர கிராமங்களில் சுமார் 20 இற்கும் மேற்பட்ட கிராம சேவை உத்தியோகத்தர் வெற்றிடங்கள் உள்ளன.

இதனால் சுனாமியால் பாதிக்கப்பட்ட கரையோர கிராம வாழ் கடற்றொழில் மக்களுக்கான நிவாரண, புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் பல சிக்கல்கள் தோன்றியுள்ளன.

இது மக்கள் மத்தியில் நிவாரணப் பகிர்வு உதவித் திட்டப் பகிர்வு என்பனவற்றிலும், பல பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

இவற்றை எல்லாம் சுட்டிக் காட்டியே வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கங்கள் மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளன. (33)

## இரு துப்பாக்கிகள் பொலிசாரால் மீட்பு

புத்தளம் மன்னார் வீதி, மூன்றாவது மைல் கல்லில் அமைந்துள்ள சிறாம்பியடிப் பகுதி வீடொன்றில் இருந்து இரு துப்பாக்கிகளை மீட்டுள்ள புத்தளம் பொலிசார் ஒரு சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர்.

புத்தளம் பொலிசாருக்கு கடந்த சனிக்கிழமை கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் சுற்றிவளைப்பொன்று இடம்பெற்றதாக பதில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி குமார் கமகே தெரிவித்தார்.

குறிப்பிட்ட வீட்டின் தோட்டப் பகுதியில் இந்தத் துப்பாக்கிகள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக பொலிசார் தெரிவித்தனர்.


அதேவேளை, பிரதான சந்தேக நபர் தலைமறைவாகி உள்ளதாக தெரிவித்த பொலிசார், இவர் பல குற்றச் செயல்களில் தொடர்பு கொண்டவர் எனவும் தெரிவித்தனர். (32)



# விளையாட்டு அரங்கு

ஜெயந்திரன்

# இவர்களின் பணி உன்னதம்



விளையாட்டைப் பொறுத்தவரை பயிற்சியாளர் பணி உன்னதமானது. இதில் பயிற்சியாளரின் கீழ் பயிற்சிபெறும் வீரரோ வீராங்கனையோ சாதித்துவிட்டால், வீரர்களின் மகிழ்ச்சியைவிட பயிற்சியாளர் பெறும் மகிழ்ச்சி அளவிட முடியாதது.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த துடகள பயிற்சியாளர் முகுந்தன் முன்மாதிரியாகத் திகழ்கின்றார்.

அவர் தனது அனுபவம் பற்றி எங்களுடன் பகிர்ந்து கொண்டவை கீழே.

**விளையாட்டுத் துறையில் ஆர்வம் எவ்வாறு ஏற்பட்டது, அதில் உங்கள் பிரவேசம் பற்றிக் கூறுங்கள்?**

இயற்கையாகவே சிறுவயது முதல் விளையாட்டுத்துறையில் குறிப்பாக மெய் வல்லுநர் துறையில் எனக்கு அதீத ஆர்வம் உண்டு. கல்வி பயிலும் காலத்தில் புலோலி புற்றளை ம.வி, மற்றும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஆகியவற்றில் எனது கல்வியுடன் விளையாட்டு செயற்பாடுகளிலும் முழு முயற்சியுடன் ஈடுபட்டுள்ளேன். எனது ஆரம்ப வளர்ச்சியில் பாடசாலையின் பங்கு மிக முக்கியமானது. பின்னர் திறந்த போட்டிகளில் யாழ். மாவட்ட ரீதியாகவும், முல்லைத்தீவு மாவட்ட ரீதியாகவும் மெய்வல்லுநர் துறையில் நன்கு பிரகாசித்திருந்தேன். எனினும் மாவட்ட மட்டமே எனது போட்டிகளின் உயர்நிலையாகவிருந்தது. திறமைகள் இருந்த போதும் போர் சூழல் ஏனைய மாகாண தேசிய போட்டிகளில் பங்குபற்ற வாய்ப்பளிக்கவில்லை.

பயிற்சியாளர் உதவியின்றி சுயதேடலின் ஊடாகவே வளர்ந்து கொண்டேன். இது பயிற்றுவித்தல் துறையில் அதீத ஆர்வத்துக்கு வித்திட்டது. பாடசாலை ஒன்றில் உடற்கல்வி ஆசிரியராக (தொண்டர் ஆசிரியர்) நான்கு வருடங்கள் கடமையாற்றி மாவட்ட, மாகாண மட்டங்களில் பல வீரர்களை உருவாக்கியிருந்தேன். இன்று நான் தேசியமட்டம், அதற்கும் அப்பால் மெய்வல்லுநர் துறையில் வீரர்களை உருவாக்கி ஓரளவு வெற்றியும் கண்டுள்ளேன்.

ஒரு மெய்வல்லுநராக இருந்து சாதிக்க முடியாததை ஒரு பயிற்சியாளனாக இருந்து சாதிக்க வேண்டும் என்ற வேணவா இத்துறையில் எனது பிரவேசத்துக்கான உந்துசக்தி ஆகியது.

**நீங்கள் இவ் விளையாட்டுத் துறைசார்ந்து மேற்கொண்ட கற்கைநெறி பற்றி கூறுங்கள்?**

விளையாட்டுத்துறை டிப்ளோமா கற்கைநெறியை கொழும்பிலுள்ள" தேசிய விஞ்ஞான விளையாட்டுத்துறை நிர்வாகத்திலும்" (NISS) மெய்வல்லுனர் பயிற்றுனர்குரிய உயர் பயிற்சியினை ஜேர்மனிய தேசிய பயிற்றுனர் திரு.பவர் அவர்களிடம் கொழும்பில் நடத்தப்பட்ட பயிற்சி நெறி மூலம் பெற்றுக்கொண்டேன்.

**இக்கற்கை நெறி மூலம் பெற்ற அனுபவங்கள் உங்களை எவ்வாறு வழி நடத்துகிறது எனக் கூறமுடியுமா?**

விளையாட்டுத்துறை என்பது பரந்துபட்ட பல விடயங்களைக் கொண்டது. இக் கற்கைநெறி மூலம் ஒரு இலக்கை அடைய வேண்டுமெனில் நிறையப் பொறுமை, அர்ப்பணிப்புடன் குறித்த இலக்கை நோக்கி வீரர்களை எவ்வாறு அழைத்துச் செல்ல வேண்டும் என்ற விடயத்தை அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. மேலும் விளையாட்டு வீரர்களை உடலியல், உளவியல் ரீதியாக நீண்டகாலம் தொடர்ச்சியாக தயார்படுத்த வேண்டிய நிலை அதற்காக பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டிய நிலைமையுள்ளது.

**நீங்கள் விளையாட்டுத் துறையில் நெருங்கிப் பழகிய முன்னோடிகள் பற்றிக் கூற முடியுமா?**

விளையாட்டு துறைசார்ந்த பல முன்னோடிகள் எனக்கு வழிகாட்டியிருக்கிறார்கள். எனினும் இதில் இருவர் மிகவும் முக்கியமானவர்கள். திரு. ரோகான் ராஜசிங்கம் யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி. இவரே எனது ஆரம்ப வழிகாட்டி ஆவார். இவரது வழிகாட்டலே எனக்கு இத்துறையில் கூடிய ஆர்வத்தை ஏற்படுத்தியது. மற்றையவர் பேராசிரியர் என்.எதிர்வீரசிங்கம். (முன்னைநாள் ஆசிய உயரம் பாய்தல் சம்பியன்) இவர் இன்றும் எனது வழிகாட்டியாக உள்ளார்.

**நீங்கள் இன்று முல்லை மாவட்டத்தில் ஓர் அரச விளையாட்டு உத்தியோகத்தராக உள்ளீர்கள். அந்த வகையில் நீங்கள் மாவட்டத்தில் விளையாட்டுத் துறையிலுள்ள சாதக, பாதக நிலைகளைச் சற்று விரிவாகக் கூற முடியுமா?**

எமது முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் விளையாட்டு சாதனங்கள், தகுந்த விளையாட்டு மைதானங்கள் இல்லாமையானது முதன்மையான பெரும் பிரச்சினையாகவுள்ளது. அடுத்ததாக எமது வீரர்களும் சரி, ஏனைய விளையாட்டு துறைசார்ந்தவர்களும் சரி தமது இலக்கு களை மாவட்ட மட்டத்தினுள்ளேயே முனைப்புடன் செயற்படுத் துகிறார்கள். அதற்கு அப்பால் நகர்வது பற்றி சிந்திப்பதாகத் தெரியவில்லை

பயிற்றுவிப்பாளர்களின் கடமையுணர்வு, பொறுப்புணர்வுகள் முக்கியத்துவம் பெறுகிறது. எமது சமூகம் விளையாட்டு வீரர்களை அக்கறையுடனும், ஆர்வத்துடனும் அரவணைக்க முன்வர வேண்டும். எமது முல்லைத்தீவு மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் உடல் ரீதியாக பல மாணவர்களும், திறமை மிக்கவர்களும் இலைமறைகாயாக உள்ளனர். இவர்களை இனம் கண்டு உரிய முறையில் வழிப்படுத்த வேண்டும்.

**சில பெற்றோர்களின் ஐயம் விளையாட்டில் தமது பிள்ளைகள் ஈடுபட்டால் கல்வியில் பாதிப்பு ஏற்படும் என்ற கருத்து பரவலாக உள்ளது. இவ்வாறான பெற்றோர்க்கு நீங்கள் கூறவிரும்புவது யாது?**


உரிய பயிற்றுனரின் வழிகாட்டலில் விளையாட்டு செயற்பாட்டை நாளாந்த கடமைகளில் ஒன்றாக ஆக்கிக்கொண்டால் அது ஒரு போதும் கல்வியில் பாதிப்பை ஏற்படுத்தாது. விளையாட்டு கல்வியின் ஓர் அங்கம் ஆகும்.அதாவது விளையாட்டானது கல்விக்கான ஓர் ஊக்கி ஆகும்.

**முல்லை மாவட்டத்தில் நிறைய விளையாட்டுக் கழகங்கள் உள்ளதை நாம் அனைவரும் அறிவோம். அக் கழகங்களின் ஆரோக்கியமான செயற்பாடுகளுக்கு நீங்கள் யாது கூறுகின்றீர்கள்?**

ஓரிரு கழகங்கள் தவிர அநேக கழகங்கள் ஓர் குறுகிய வட்டத்திற்கு மட்டும் தமது விளையாட்டுக்களை வரையறுத்து இயங்குகின்றன. மேலும் ஒவ்வொரு கழகமும் தனித்துவமான ஒரு விளையாட்டு நிகழ்ச்சியைத் தெரிவு செய்வதுடன் அதனை உயர்மட்டத்திற்கு கொண்டு செல்ல முயற்சிக்க வேண்டும் அத்துடன் முல்லை. மாவட்டத்தை பொறுத்த வரை மாவட்ட மட்டம் அல்லது வன்னிப்பெரு நிலப்பரப்பு ரீதியான போட்டியே அவர்களின் உயர் இலக்காக காணப்படுகிறது. இதனைத் தாண்டி அதற்கு அப்பாலும் தமது திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும். மாகாண, தேசியரீதியாகப் பிரகாசிக்கும் போதே விளையாட்டில் உண்மையான வளர்ச்சி ஏற்படும்.

**இறுதியாக உங்களிடம் கேட்பது நிதி காரணமாக நிலைதடுமாறும் விளையாட்டு சாதனையாளர்களுக்கு என்ன திட்டம் உங்களிடம் உள்ளது. அவர்களுக்கு நம்பிக்கையூட்ட நீங்கள் கூறவிரும்புவது யாது?**

திறமையான வீரர் சரியான முறையில் தனது திறமையை வெளிக்காட்டுவார் ஆயின் அந்தத் திறமையையே ஆதாரமாக வைத்து நிதியினைப் பெற்றுக்கொள்வது சாத்தியமானது. அந்தத் திறமையான வீரர்களை நிதியளித்து(sponsors) ஊக்குவிப்பதற்காக பல அரச, அரசசார்பற்ற, தனிப்பட்டோர் முன் வந்துள்ளதை அண்மைக்காலத்தில் காணக்கூடியதாக இருந்தது.



த.அருணா

# போருக்குள் ஒரு உக்கிர போர்





ஓவல் டெஸ்ட் குறித்த விமர்சனங்களோ அன்றி அது தொடர்பான எண்ணப்பாடுகள் குறித்தோ எவராலும் ஆருடம் கூறிவிட முடியாத நிலையொன்று தோன்றியுள்ளதை அவதானிக்க முடிகிறது.

இங்கிலாந்து - அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான 2005 ஆம் ஆண்டுக்கான ஆஷஸ் டெஸ்ட் போட்டியின் இறுதிப் போட்டி இங்கிலாந்தின் ஓவல் மைதானத்தில் நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ளது.

இப்போட்டித் தொடர் குறித்து முன்னர் வெளிவந்த கருத்துக்கள் சிதறடிக்கப்படும் விதத்தில் இப்போட்டித் தொடரின் நான்கு போட்டிகளின் முடிவுகள் அமைந்தமையே இதற்கு முக்கிய காரணமாகும்.

ஆஷஸ் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் வோகன் தலைமையிலான இங்கிலாந்து அணி இம்முறை அவுஸ். அணிக்கு பாரிய சவால்களை ஏற்படுத்தக் கூடிய வகையில் நெருக்கடிகளை ஏற்படுத்தும் என்று நம்பப்பட்டது. ஆனால், முதலாவது போட்டியின் முடிவு அதற்கு எதிர்மாறாகவே நடந்தது. அதாவது, இங்கிலாந்து அணி அவுஸ்.அணியிடம் 239 ஓட்டங்களால் படுதோல்வி கண்டது.

இந்நிலையில், வழமைபோல் அவுஸ் அணியின் வெற்றி ஆதிக்கம் தொடரும் என எதிர்பார்க்கப்பட்டதுடன், இங்கிலாந்து அணி மீதிருந்த எதிர்பார்ப்புக்களும் இத்தோல்வி மூலம் வலுவிழந்தது.

இதற்கு அவுஸ். அணி மீது ரசிகர்கள் கொண்டிருந்த நம்பிக்கையும், அவர்கள் கடந்த காலங்களில் ஈட்டிவந்த டெஸ்ட் வெற்றிகளும் காரண மாகும்.

ஆனால், முதல் டெஸ்டில் தோல்வியுற்றவுடன், இங்கிலாந்து அணியின் தலைவர் மைக்கல் வோகன் "இப்போட்டியின் முடிவுகளை வைத்துக் கொண்டு எங்களை யாரும் மதிப்பீட வேண்டாம்" எனக் கூறியிருந்தார்.

இந்நிலையில் வோகன் மீதும், இங்கிலாந்து அணி மீதும் ஒரு அனுதாப நிலை காணப்பட்டதுடன், ஆஷஸ் தொடரின் கடந்த காலங்களின் தோல்விகள் போன்றே இம்முறையும் தொடரும் என நம்பப்பட்டது.

ஆனால், இவற்றை எல்லாம் பொய்யாக்கும் விதத்தில் இரண்டாவது டெஸ்டில் இரண்டு ஓட்டங்களினால் பெரும் பரபரப்புக்கு மத்தியில் அவுஸ.அணியைத் தோற்கடித்தது வோகன் தலைமையிலான இங்கிலாந்து அணி.

இவ்வெற்றியின் பின்னரும்கூட இங்கிலாந்து அணியின் திறமைகளையோ அன்றி அடுத்து வரும் போட்டிகளில் அவர்கள் சிறப்பாக ஆடுவார்கள் என்றோ எவரும் நம்பிக்கை கொள்ள வில்லை. அதற்கு எதிர்மாறான கூற்றுக்களையே வெளியிட்டனர்.

ஆனால் இதற்கு மாறாக மூன்றாவது போட்டியில் இங்கிலாந்தின் கை மேலோங்கியதோடு இயற்கை (மழை) அவுஸ்திரேலியாவைக் காப்பாறியது எனலாம்.இதைத் தொடர்ந்து இங்கிலாந்தின் மீதான நம்பிக்கை வலுப்பெற்றது.

இவ்வாறே இங்கிலாந்து அணியின் ஆதிக்கம் நான்காவது போட்டியிலும், தொடர்ந்ததென்று கூறலாம். அதாவது, தொடர்ந்து 17 ஆண்டுகளாக பல வோனில் சிக்கிக் கொள்ளாத அவுஸ் .அணி இப்போட்டியின் மூலம் அந்நிலைக்கு உள்ளாகியதுடன் மூன்று விக்கெட்டுக்களால் தோல்வியடைந்தது.

எனவே, நாளை மறுதினம் நடைபெறவுள்ள ஓவல் டெஸ்ட் ஒரு முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாக இரு அணிகளுக்கும் மாறியுள்ளதென கூறுகின்றார்களே ஒழிய இப்போட்டி குறித்த எண்ணப்பாடுகளோ அன்றி ஆருடங்களையோ எவரும் முன்வைப்பதாக இல்லை.

இதற்கு இங்கிலாந்து அணியின் வளர்ச்சி மற்றும் அவுஸ்.அணியின் கடந்தகால வெற்றி ஆதிக்கம் என்பனவே முக்கியமானவையாகவுள்ளது.

இப்போட்டியின் முடிவு எவ்வாறு அமையும் எனத் தெரியுமோ இல்லையோ இப்போட்டி குறித்து எந்த அணி வெல்லும் என்ற முடிவுக்கு எவரும் செல்லவில்லை என்பதே ஓவல் டெஸ்டின் சிறப்பாக அமைகிறது.

எனவே, இந்நிலையைத் தோன்றுவிக்கக் காரணமென்னவெனில் வோகன் தலைமையிலான இங்கிலாந்து அணியின் படிப்படியான வளர்ச்சி எனில் எவருமே மறுப்பதற்கில்லை.

இந்நிலையில், ஓவல் டெஸ்ட் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதுடன் இந்த ஆண்டின் பெரும் விருந்தாகவும் ரசிகர்களுக்கு அமையும் என்பதை கூறித்தான் தெரிய

பூ.சுபானந்



# தமிழீழ மீட்புநிதிக் கடன்மீளல்-2005

## காரைநகர்உதவி அரச அதிபர் பிரிவு

### குலுக்கல் அடிப்படையில் தெரிவானோர்

யா/கா/84 திரு.நமசிவாயம் சிவகுமாரன்.
யா/கா/129 திருமதி.அம்மணி தேவராசா.
யா/கா/339 திரு.சுப்பிரமணியம் திருஞானசம்பந்தன்.
யா/கா/464 திரு.ஐயன் செல்லத்துரை.
யா/கா/510 திரு.விஸ்வநாதஐயர் ஜெகதீசன்.
யா/கா/720 திரு.மயில்வாகனம் இரத்தினசிங்கம்.
யா/கா/837 திரு.கணபதிப்பிள்ளை நாகராஜா.
யா/கா/928 திருமதி.தவமணி தெய்வநாயகம்பிள்ளை.
யா/கா/945 திரு.சின்னையா அருளம்பலம்.
யா/கா/999 திரு.நவரத்தினம் கந்தையா.
யா/கா/1018 திருமதி.சரோஜினிதேவி விக்னேஸ்வரன்.
யா/கா/1065 திருமதி.சிவபாக்கியம் நடராசா.
யா/கா/1147 திருமதி.சரோஜினி மகேந்திரம்.

## கரவெட்டி உதவி அரச அதிபர் பிரிவு

### குலுக்கல் அடிப்படையில் தெரிவானோர்

யா/க/2 திரு.தாமோதரம்பிள்ளை இராசரத்தினம்.
யா/க/132 திருமதி.பாக்கியம் சண்முகம்.
யா/க/306 திருமதி.செல்லம்மா பொன்னையா.
யா/க/337 திருமதி.நாகேஸ்வரி கதிரவேற்பிள்ளை.
யா/க/550 திரு.திருநாவுக்கரசு விக்னேஸ்வரதாசன்.
யா/க/591 திருமதி.செல்வக்குமாரி அருளானந்தசிவம்.
யா/க/783 திருமதி.யோகேஸ்வரி ஆறுமுகநாதன்.
யா/க/828 திருமதி.சரஸ்வதி இரத்தினசிங்கம்.
யா/க/848 செல்வி.விமலேஸ்வரி கந்தையா.
யா/க/1034 திருமதி.பார்பதிப்பிள்ளை வடிவேலு.
யா/க/1158 திருமதி.சந்திரிகா செல்வராசா.
யா/க/1241 திருமதி.சாந்தினி சிவானந்தம்பிள்ளை.
யா/க/1261 திருமதி.அன்னபூரணம் சுப்பிரமணியம்.
யா/க/1273 திரு.நடராசா விஜயரத்தினம்.
யா/க/1381 திரு.கணபதிப்பிள்ளை கிருஷ்ணராஜா.
யா/க/1399 திருமதி.இராசேஸ்வரி இராசரத்தினம்.
யா/க/1500 திரு.சீனித்தம்பி சித்தரஞ்சன்.
யா/க/1515 திரு.கதிரேசு செல்வராசா.
யா/க/1992 திருமதி.சிவகாமிப்பிள்ளை சின்னத்தம்பி.
யா/க/2041 திருமதி.றெஜினாஞானமணி மதுரநாயகம்.
யா/க/2060 திரு.ஆறுமுகம் சிவநாதன்.
யா/க/2064 திரு.ஆறுமுகம் ஆனந்தராசா.
யா/க/2219 திரு.கந்தசாமி சச்சிதானந்தம்.
யா/க/2549 திரு.சின்னத்தம்பி மகேசன்.
யா/க/2565 திரு.சின்னத்துரை செல்லையா.
யா/க/2656 திரு.வேலுப்பிள்ளை செல்லத்துரை.
யா/க/2678 திருமதி.செல்வராணி தவராஜா.
யா/க/2730 திரு.சின்னத்துரை அருந்தவராசா.
யா/க/3085 திருமதி.பரமேஸ்வரி சிவராசா.
யா/க/3089 திருமதி.பாலபரமேஸ்வரி சண்முகராசா.
யா/க/3097 திருமதி.இரஞ்சிதமலர் மகாலிங்கம்.
யா/க/3585 திரு.கந்தையா சிவபாதசுந்தரம்.
யா/க/3672 திருமதி.இறஞ்சினிதேவி சோதிநாகரட்ணம்.
யா/க/3696 திரு.இளையதம்பி செல்லையா.
யா/க/3959 திருமதி.யோகம்மா சின்னத்துரை.
யா/க/3988 திரு.மாணிக்கம் ஆனந்தராசா.
யா/க/4040 செல்வி.காந்திமதி சிதம்பரப்பிள்ளை.
யா/க/4150 திருமதி.சின்னத்துரை கணேசலிங்கம்.
யா/க/4263 திரு.ஐயாத்துரை நடராஜா.
யா/க/4279 திருமதி.நாகரட்ணம் இராசநாயகம்.
யா/க/4413 திருமதி.மங்களேஸ்வரி புஸ்பநாதன்.
யா/க/4457 திரு.செவ்வந்திநாதன் கைலாசநாதன்.
யா/க/4517 திருமதி.சுசிலேந்திராணி தெய்வலிங்கம்.
யா/க/5006 திரு.சின்னையா வீரசிங்கம்.
யா/க/5330 திரு.கந்தையா வயிரமுத்து.
யா/க/5446 திருமதி.தெய்வேந்திராணி சின்னக்கண்டு.
யா/க/5473 திருமதி.பரமேஸ்வரி பாலசுப்பிரமணியம்.
யா/க/5479 திரு.சுப்பிரமணியம் சிவசுப்பிரமணியம்.
யா/க/5490 திரு.செல்லத்துரை நவரத்தினசாமி
யா/க/5515 திரு.இரத்தினம் குமாரானந்ததேவர்.
யா/க/5725 திரு.கந்தன் சிவபாலன்.
யா/க/5808 திருமதி.அரியதேவி தம்பிராசா.
யா/க/5812 திரு.சின்னத்தம்பி சிவலிங்கம்.
யா/க/5914 திருமதி.பரிமளாதேவி ராஜேந்திரம்.
யா/க/5921 திருமதி.சரோஜினிதேவி தவராசா.
யா/க/6040 திரு.ஐயாத்துரை அழகதுரை.
யா/க/6084 திருமதி.கனகம்மா சின்னையா.
யா/க/6095 திரு.ஐயாத்துரை சுப்பிரமணியம்.
யா/க/6166 திரு.கதிர்காமக்குருக்கள் சதாசிவக்குருக்கள்.
யா/க/6223 திரு.சண்முகநாதன் நேசராசா.
யா/க/6230 திருமதி.தவமலர் அப்புத்துரை.
யா/க/6262 திருமதி.மங்களேஸ்வரி ஜெயக்குமார்.
யா/க/6275 திருமதி.காசுமலர் நல்லான்.
யா/க/6326 திருமதி.கௌரி செல்வராஜா.
யா/க/6328 திருமதி.செல்லம்மா கதிரவேலு.
யா/க/6338 திருமதி.மீனாட்சி வேலாயுதம்.
யா/க/6398 திருமதி.தேவி செல்லத்துரை.
யா/க/6608 திருமதி.கண்ணகை முருகேசு.
யா/க/6836 திரு.வேலாயுதம் முருகுப்பிள்ளை.
யா/க/6962 திருமதி.இந்திராதேவி சிவலோகநாதன்.
யா/க/7002 திருமதி.ரஜனி சந்திரலிங்கம்.
யா/க/7057 திரு.சுப்பிரமணியம் தங்கராசா.
யா/க/7121 திருமதி.இராணிமலர் சூரியஉதயன்.
யா/க/7148 திருமதி.இராசம்மா சிவஞானம்.
யா/க/7267 திருமதி.இலட்சுமி சிதம்பரப்பிள்ளை.
யா/க/7283 திருமதி.இந்திராணி உதயரவிச்சந்திரன்.
யா/க/7404 திருமதி.இராசமணி சுந்தரம்.
யா/க/7549 திரு.மயில்வாகனம் சரவணபவன்.
யா/க/7632 திருமதி.அன்னலட்சுமி சிவானந்தன்.
யா/க/7674 திரு.சின்னையா யுகராஜா.
யா/க/7776 திருமதி.சின்னம்மா கந்தசாமி.
யா/க/7816 திரு.குட்டியன் சின்னத்துரை.

## கரவெட்டிஉதவி அரச அதிபர் பிரிவு

### மூப்பின் அடிப்படையில் தெரிவானோர்

யா/க/4 திருமதி.தங்கம்மா பஞ்சாட்சரம்.
யா/க/18 திரு.வேலுப்பிள்ளை கனகசபை.
யா/க/24 திருமதி.தங்கம்மா வேலுப்பிள்ளை.
யா/க/49 திரு.ஐயாத்துரை மார்க்கண்டு.
யா/க/56 திரு.சின்னையா மயில்வாகனம்.
யா/க/64 திருமதி.செல்லம்மா சிவப்பிரகாசம்.
யா/க/66 திருமதி.சிவக்கொழுந்து சுப்பிரமணியம்.
யா/க/77 திரு.ஆழ்வாப்பிள்ளை வீரகத்தி.
யா/க/89 திரு.சின்னத்தம்பி சிற்றம்பலம்.
யா/க/92 திரு.கணபதிப்பிள்ளை பொன்னையா.
யா/க/105 திருமதி.கனகம்மா வல்லிபுரம்.
யா/க/110 திரு.சித்தர் வீரசிங்கம்.
யா/க/111 திரு.வேலுப்பிள்ளை சிவபாதசுந்தரம்.
யா/க/117 திரு.ஆறுமுகம் கந்தையா.
யா/க/118 திரு.கணபதி சிதம்பரப்பிள்ளை.
யா/க/119 திருமதி.இலட்சுமிப்பிள்ளை சடாரணமூர்த்தி.
யா/க/130 திரு.சிதம்பரப்பிள்ளை சிற்றம்பலம்.
யா/க/142 திரு.கணபதிப்பிள்ளை செந்தியா.
யா/க/155 திருமதி.பொன்னம்மா பொன்னம்பலம்.
யா/க/156 திரு.கந்தையா இரத்தினசிங்கம்.
யா/க/166 திரு.முருகேசு கந்தப்பு.
யா/க/170 திரு.புதியார் கிருஷ்ணபிள்ளை.
யா/க/178 திருமதி.பாறுபதி செல்லத்துரை.
யா/க/191 திரு.கந்தன் கிட்டிணன்.
யா/க/197 திருமதி.தங்கம்மா செவ்வந்திநாதன்.
யா/க/204 திரு.தம்பையா துரைராசா.
யா/க/214 திரு.சின்னக்குட்டி நல்லதம்பி.
யா/க/227 திரு.கணபதிப்பிள்ளை கந்தையா.
யா/க/235 திரு.வேலன் கந்தன்.
யா/க/243 திரு.பழனியர் அமிர்தலிங்கம்.
யா/க/277 திருமதி.இலட்சுமி ஆறுமுகம்.
யா/க/279 திரு.முருகேசு ஸ்ரீபத்மநாதன்.
யா/க/283 திரு.கிறிஸ்தோபர் ஞானப்பிரகாசம்.
யா/க/292 திருமதி.இலட்சுமிப்பிள்ளை சின்னத்துரை.
யா/க/293 திரு.ஆழ்வாப்பிள்ளை கணபதிப்பிள்ளை.
யா/க/297 திரு.முருகேசு தியாகராஜா.
யா/க/298 திரு.சரவணமுத்து தாமோதரம்.
யா/க/320 திரு.சிலம்பு வீரகத்தி.
யா/க/353 திருமதி.சின்னம்மா சின்னத்தம்பி.
யா/க/363 திருமதி. இராசம்மா சண்முகம்.
யா/க/379 திருமதி.செல்லம்மா சுந்தரம்.
யா/க/412 திரு.வேலுப்பிள்ளை ஆறுமுகம்.
யா/க/413 திருமதி.மகேஸ்வரி சபாபதி.
யா/க/430 திருமதி.பொன்னம்மா கந்தப்பு.
யா/க/433 திருமதி.சிவக்கொழுந்து கந்தையா.
யா/க/435 திருமதி.சிவக்கொழுந்து கந்தையா.
யா/க/456 திருமதி.சீதேவி வேலன்.
யா/க/462 திருமதி.வள்ளியம்மை வேலுப்பிள்ளை.
யா/க/463 திரு.சிதம்பரப்பிள்ளை கந்தப்பு.
யா/க/482 திருமதி.இலட்சுமிப்பிள்ளை குணரத்தினம்.
யா/க/536 கந்தப்பு குமாரசாமி.
யா/க/546 திருமதி.மரியமுத்து அந்தோனி.
யா/க/558 திரு.சவரிமுத்து நீக்கிலாப்பிள்ளை.
யா/க/562 திருமதி.இலட்சுமி பஞ்சநாதன்.
யா/க/563 திரு.சின்னவன் வடிவேலு.
யா/க/582 திரு.வீரகத்தி சிற்றம்பலம்.
யா/க/604 திருமதி.மாணிக்கம் சிவஞானம்.
யா/க/613 திரு.சின்னத்தம்பி தங்கராசா.
யா/க/614 திரு.ஆழ்வாப்பிள்ளை சதாசிவம்.
யா/க/621 திரு.தம்பையா முத்தையா.
யா/க/625 திருமதி.அம்பிகை துரை.
யா/க/640 திரு.உடையப்பர் மூத்ததம்பி.
யா/க/643 திருமதி.இலட்சுமிப்பிள்ளை வேலுப்பிள்ளை.
யா/க/649 திரு.வேலுப்பிள்ளை தியாகராசா.
யா/க/656 திருமதி.சுசிர்தம்மா சரவணமுத்து.
யா/க/667 திரு.இராமநாதர் மயில்வாகனம்.
யா/க/670 திருமதி.வள்ளி ஆழ்வார்.
யா/க/683 திரு.கந்தசாமி தர்மராஜா.
யா/க/684 திரு.சிங்காரவேலு சுந்தரம்பிள்ளை.
யா/க/687 திரு.ஆழ்வார் சிதம்பரப்பிள்ளை.
யா/க/698 திருமதி.பரமேஸ்வரி சிவபாதசுந்தரம்.
யா/க/705 திரு.சிவப்பு சுந்தரம்.
யா/க/708 திரு.க.சின்னத்தம்பி சிதம்பரநாதன்.
யா/க/714 திரு.சின்னையா கந்தசாமி.
யா/க/720 திரு.கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை.
யா/க/723 திருமதி.அழகேஸ்வரி அருணையா.
யா/க/749 திரு.முருகர் செல்லப்பாக்கியம்.
யா/க/750 திரு.தம்பாப்பிள்ளை ஆறுமுகம்.
யா/க/752 திரு.நீலக்குட்டி முத்துக்குமாரு.
யா/க/768 திரு.சின்னத்தம்பி தங்கராசா.
யா/க/779 திருமதி.சிவமலர் கந்தசாமி.
யா/க/786 திருமதி.பத்தினிப்பிள்ளை சின்னத்தம்பி.
யா/க/787 திருமதி.குஞ்சுப்பிள்ளை சின்னையா.
யா/க/789 திரு.முருகேசு மயில்வாகனம்.
யா/க/796 திரு.கந்தையா முருகேசு.
யா/க/801 திரு.தாமு சின்னத்தம்பி.
யா/க/820 திருமதி.இலட்சுமி கிருஷ்ணன்.
யா/க/821 திருமதி.புவனேஸ்வரிஅம்மா சபாரத்தினக்குருக்கள்.
யா/க/825 திரு.சிதம்பரி இரத்தினம்.
யா/க/832 திருமதி.திலகவதி விநாயகமூர்த்தி.
யா/க/847 திரு.சிற்றம்பலம் செல்லத்துரை.
யா/க/854 திரு.சின்னத்தம்பி முருகேசு.
யா/க/855 திரு.சின்னத்தம்பி முருகேசு.
யா/க/864 திரு.திருஞானசம்பந்தமூர்த்தி சிவலோகநாதன்.
யா/க/872 திரு.தம்பையா வேலாயுதம்.
யா/க/876 திருமதி.சிவக்கொழுந்து மார்க்கண்டு.
யா/க/883 திரு.நல்லதம்பி கனகசபை.
யா/க/884 திரு.நல்லதம்பி கனகசபை.
யா/க/887 திரு.வேலுப்பிள்ளை பாலசிங்கம்.
யா/க/888 திருமதி.இலட்சுமிப்பிள்ளை கனகசபாபதி.
யா/க/911 திரு.கனகசபை ஆறுமுகம்.
யா/க/923 திரு.கந்தையா பழனிப்பிள்ளை.
யா/க/928 திரு.கதிர்காமு முருகேசு.
யா/க/945 திரு.சின்னையா சிவானந்தம்.
யா/க/947 திருமதி.செல்லம்மா தம்பிப்பிள்ளை.
யா/க/961 திருமதி.இலட்சுமிஅம்மா தெட்சணாமூர்த்திஐயர்.
யா/க/979 திரு.சூரிப்பிள்ளை வைரமுத்து.
யா/க/987 திரு.கந்தையா கதிர்காமு.
யா/க/991 திரு.சின்னையா கிருஷ்ணபிள்ளை.
யா/க/997 திருமதி.பரமேஸ்வரி வல்லிபுரம்.
யா/க/998 திரு.கனகசபை செல்வராசா.
யா/க/1000 திருமதி.சிவயோகம் திருஞானசுந்தரம்.
யா/க/1006 திரு.ஆழ்வாப்பிள்ளை சின்னத்துரை.
யா/க/1020 திரு.கந்தர் வேலாயுதம்.
யா/க/1023 திரு.அப்பலையா கணபதிப்பிள்ளை.
யா/க/1026 திரு.சின்னையா துரைச்சாமி.
யா/க/1054 திருமதி.பத்தினிப்பிள்ளை சிவபாதசுந்தரம்.
யா/க/1060 செல்வி.சசிமதி சிவானந்தன்.
யா/க/1070 திரு.கந்தப்பு தியாகராசா.
யா/க/1072 திரு.கணபதிப்பிள்ளை சின்னையா.
யா/க/1087 திரு.சின்னப்பா தணிகாசலம்.
யா/க/1095 திருமதி.சிவபாக்கியம் தம்பிப்பிள்ளை.
யா/க/1098 திருமதி.மனோரஞ்சிதம் தவசீலன்.
யா/க/1105 திரு.அருணாசலம் சோமசுந்தரம்பிள்ளை.
யா/க/1113 திரு.சண்முகம் செல்லையா.
யா/க/1115 திருமதி.சின்னத்தங்கம் வைரமுத்து.
யா/க/1123 திரு.கந்தர் ஆழ்வாப்பிள்ளை.
யா/க/1125 திருமதி.இலட்சுமிப்பிள்ளை ஆறுமுகம்.
யா/க/1126 திருமதி.மனோன்மணி செல்வராசா.
யா/க/1137 திருமதி.சிவதேவரத்தினம் தவபாலசிங்கம்.
யா/க/1145 திரு.பொன்னுச்சாமிகுருக்கள் சிவராசசர்மா.
யா/க/1153 திரு.வல்லிபுரம் செல்லையா.
யா/க/1175 திரு.கணபதிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை.
யா/க/1183 திரு.கனகசபை பத்மநாதன்.
யா/க/1186 திருமதி.இராசம்மா முருகேசு.
யா/க/1202 திரு.சின்னத்தம்பி முருகன்.
யா/க/1207 திருமதி.சின்னப்பிள்ளை கிட்டிணபிள்ளை.
யா/க/1209 திருமதி.இராசமணி சிவலிங்கம்.
யா/க/1218 திருமதி.நாகேஸ்வரி சிவபாதசுந்தரம்.
யா/க/1257 திரு.நல்லதம்பி முருகேசு.
யா/க/1277 திரு.இராசன் விஜயரத்தினம்.
யா/க/1282 திருமதி.இரத்தினம் செல்லத்துரை.
யா/க/1283 திருமதி.தங்கமணி வைரமுத்து.
யா/க/1287 திரு.ஆறுமுகம் இராசரத்தினம்.
யா/க/1300 திரு.ஆறுமுகம் இராசரத்தினம்.
யா/க/1307 திரு.இராசையா குலசிங்கம்.
யா/க/1320 திரு.காசிப்பிள்ளை கந்தசாமி.
யா/க/1321 திருமதி.தங்கமுத்து கந்தசாமி.
யா/க/1325 திரு.கணபதிப்பிள்ளை சுந்தவனம்.
யா/க/1348 திரு.ஆறுமுகம் கதிரவேல்.
யா/க/1363 திரு.கப்பர் கணபதிப்பிள்ளை.
யா/க/1367 திருமதி.இராஜேஸ்வரி புலேந்திரா.
யா/க/1369 திரு.வடிவேலு மகேஸ்வரன்.
யா/க/1372 திரு.சிவகுரு வேலும்மயிலும்.
யா/க/1384 திரு.திருநாவுக்கரசு பொன்னுத்துரை.
யா/க/1395 திரு.கதிர்காமு கிருஷ்ணபிள்ளை.
யா/க/1396 திருமதி.குஞ்சியார் கந்தசாமி.
யா/க/1404 திரு.தம்பிப்பிள்ளை துரைராஜா.
யா/க/1410 திரு.தங்கராஜா ரமணன்.
யா/க/1422 திருமதி.மாணிக்கம் பொன்னையா.
யா/க/1423 திருமதி.மாணிக்கம் பொன்னையா.
யா/க/1425 திரு.நடராசா கைலாசலிங்கம்.
யா/க/1441 திரு.குமாரவேலு நடராசா.
யா/க/1446 திரு.கந்தையா நமசிவாயம்.
யா/க/1453 திருமதி.பொன்னம்மா சண்முகராசா.
யா/க/1461 திரு.தாமு வீரசிங்கம்.
யா/க/1462 திருமதி.அன்னபாக்கியம் கோபாலு.
யா/க/1484 திரு.சின்னத்தம்பி வேலாயுதம்.
யா/க/1492 திரு.அருணாசலம் திருநாவுக்கரசு.
யா/க/1498 திரு.சின்னத்தம்பி ஐயாத்துரை.
யா/க/1501 திரு.கணபதிப்பிள்ளை கந்தையா.
யா/க/1502 திரு.ஆழ்வார் மயில்வாகனம்.
யா/க/1505 திரு.சின்னத்தம்பி முத்தையா.
யா/க/1507 திரு.சின்னையா இராசமசாமி.
யா/க/1518 திரு.வேலுப்பிள்ளை சண்முகசுந்தரம்.
யா/க/1526 திரு.பொன்னம்மா கணபதிப்பிள்ளை.
யா/க/1543 திரு.வேலுப்பிள்ளை தங்கராஜா.
யா/க/1556 திருமதி.இராசம்மா தாமோதரம்பிள்ளை.
யா/க/1560 திரு.சரவணமுத்து செல்வநாயகம்.
யா/க/1581 திரு.செல்லையா இராஜா.
யா/க/1588 திரு.சின்னையா கந்தையா.
யா/க/1597 திருமதி.புவனேஸ்வரி சுப்பிரமணியம்.
யா/க/1604 திருமதி.வள்ளிநாச்சி கந்தவனம்.

# தமிழீழ மீட்புநிதிக் கடன்மீளல்-2005

## கரவெட்டி உதவி அரச அதிபர் பிரிவு

### மூப்பின் அடிப்படையில் தெரிவானோர்

யா/க/1610 திரு.சுப்பிரமணியம் சோமசுந்தரம்.
யா/க/1611 திரு.கந்தையா முத்துலிங்கம்.
யா/க/1619 திருமதி.நாகம்மா மாணிக்கம்.
யா/க/1621 திருமதி.சரஸ்வதி சிதம்பரநாதன்.
யா/க/1631 திருமதி.சரஸ்வதி கதிரேசு.
யா/க/1648 திரு.விநாசித்தம்பி செல்வநாயகம்.
யா/க/1651 திருமதி.செல்லம்மா சின்னையா.
யா/க/1659 திரு.முருகேசு கந்தசாமி.
யா/க/1662 திருமதி.அன்னப்பிள்ளை இரத்தினம்.
யா/க/1670 திரு.கணபதிப்பிள்ளை மயில்வாகனம்.
யா/க/1671 திரு.கணபதிப்பிள்ளை மயில்வாகனம்.
யா/க/1672 திருமதி.செல்லம்மா கனகரத்தினம்.
யா/க/1673 திருமதி.பரமேஸ்வரி மார்க்கண்டு.
யா/க/1674 திரு.கணபதிப்பிள்ளை கிருஷ்ணபிள்ளை.
யா/க/1682 திரு.வேலுப்பிள்ளை திருநாவுக்கரசு.
யா/க/1686 திருமதி.பாக்கியம் சுப்பிரமணியம்.
யா/க/1691 திரு.கந்தவனம் இராஜதுரை.
யா/க/1693 திருமதி.தெய்வானை கணபதிப்பிள்ளை.
யா/க/1696 திரு.எகாம்பரம் சோமசுந்தரம்.
யா/க/1699 திரு.சிற்றம்பலம் சின்னத்துரை.
யா/க/1704 திரு.முருகப்பர் வேலுப்பிள்ளை.
யா/க/1716 திருமதி.தெய்வானை பொன்னுச்சாமி.
யா/க/1721 திரு.ஆறுமுகம் சுப்பிரமணியம்.
யா/க/1724 திரு.கந்தவனம் தங்கவேலு.
யா/க/1731 திருமதி.விக்டோரியாராணி விக்ரர்இம்மானுவேல்.
யா/க/1732 திருமதி.மகேஸ்வரி பாலசிங்கம்.
யா/க/1739 திரு.கதிரேசு சபாரத்தினம்.
யா/க/1741 திருமதி.எலிசபேத் அந்தோனிப்பிள்ளை.
யா/க/1743 திரு.கதிரேசு சபாரத்தினம்.
யா/க/1754 திரு.வீரகத்தி வேலும்மயிலும்.
யா/க/1760 திருமதி.சின்னம்மா கிட்டிணபிள்ளை.
யா/க/1761 திருமதி.பார்வதி அரசரத்தினம்.
யா/க/1766 திருமதி.கனகம்மா நடராசா.
யா/க/1776 திருமதி.தங்கம்மா கந்தையா.
யா/க/1777 திரு.கோவிந்தன் கோவிந்தராசா.
யா/க/1780 திருமதி.மனோரதி சண்முகதாஸ்.
யா/க/1785 திரு.சின்னத்தம்பி நமசிவாயம்.
யா/க/1804 திருமதி.நாகம்மா திருநாவுக்கரசு.
யா/க/1810 திரு.கணபதிப்பிள்ளை சபாரத்தினம்.
யா/க/1820 திரு.கந்தவனம் நடராசா.
யா/க/1821 திரு.கந்தவனம் நடராசா.
யா/க/1832 திரு.கந்தவனம் நடராசா.
யா/க/1838 திரு.வாரித்தம்பி தம்பிப்பிள்ளை.
யா/க/1841 திரு.வேலுப்பிள்ளை தம்பிப்பிள்ளை.
யா/க/1855 திருமதி.இராசம்மா நாகமணி.
யா/க/1866 திரு.கதிரவேலு மயில்வாகனம்.
யா/க/1875 திரு.நாகலிங்கம் அழகானந்தம்.
யா/க/1878 திரு.சின்னையா நடராசா.
யா/க/1881 திரு.கந்தவனம் தங்கவேலு.
யா/க/1888 திருமதி.இராசேஸ்வரி வேதாரணியம்.
யா/க/1900 திருமதி.விமலமணி இராசநாயகம்.
யா/க/1912 திருமதி.செல்லாச்சி சின்னத்துரை.
யா/க/1927 திருமதி.இராஜேஸ்வரி சிவசுப்பிரமணியம்.
யா/க/1948 திரு.தம்பையா சுப்பிரமணியம்.
யா/க/1951 திருமதி.வள்ளியம்மை சின்னத்தம்பி.
யா/க/1957 திருமதி.செல்லம்மா ஏரம்பமூர்த்தி.
யா/க/1958 திரு.முருகேசு இராசையா.
யா/க/1960 திரு.வல்லிபுரம் முருகேசு.
யா/க/1963 திரு.கந்தையா சின்னையா.
யா/க/1964 திருமதி.கனகம்மா தம்பிப்பிள்ளை.
யா/க/1971 திரு.வல்லிபுரம் சிவகுருநாதன்.
யா/க/1975 திரு.வைரவிப்பிள்ளை கனகசிங்கம்.
யா/க/1986 திரு.ஆறுமுகம் கனகரத்தினம்.
யா/க/2000 திருமதி.தங்கம்மா வேதநாயகம்.
யா/க/2012 திருமதி.சேதுப்பிள்ளை தர்மராசா.
யா/க/2028 திரு.வேலுப்பிள்ளை வைரமுத்து.
யா/க/2036 திருமதி.சிவக்கொழுந்து கந்தவனம்.
யா/க/2045 திருமதி.சின்னம்மா வேலுப்பிள்ளை.
யா/க/2055 திருமதி.அக்கினேஸ் யோசப்மேரி.
யா/க/2063 திரு.கந்தையா சுப்பிரமணியம்.
யா/க/2075 திருமதி.இராசம்மா ஐயாத்துரை.
யா/க/2082 திரு.கந்தசாமி பேரம்பலம்.
யா/க/2089 திரு.கந்தையா பஞ்சாட்சரம்.
யா/க/2104 திருமதி.செல்லம்மா கிட்டினபிள்ளை.
யா/க/2113 திரு.இராசதுரை பத்மநாயன்.
யா/க/2116 திரு.குமாரசாமி சண்முகலிங்கம்.
யா/க/2130 திருமதி.தில்லைச்சி சிவப்பர்.
யா/க/2160 திருமதி.சிதம்பரம் நாகரட்ணம்.
யா/க/2164 திரு.கணபதிப்பிள்ளை கார்த்திகேசு.
யா/க/2167 திரு.கணபதி சேனாபதி.
யா/க/2171 திரு.வல்லிபுரம் சின்னத்தம்பி.
யா/க/2183 திரு.வல்லிபுரம் காசிப்பிள்ளை.
யா/க/2191 திருமதி.சங்குபதி நாகமுத்து.
யா/க/2202 திருமதி.சரஸ்வதி திருநாவுக்கரசு.
யா/க/2206 திரு.இளையவன் சபாபதி.
யா/க/2222 திரு.தாமு குண்டுமணி.
யா/க/2223 திரு.கணபதிப்பிள்ளை நமசிவாயம்.
யா/க/2254 திரு.சிவகுரு நடராசா.
யா/க/2255 திரு.கதிரவேலு சுப்பிரமணியம்.
யா/க/2261 திரு.சிவகுரு பொன்னம்பலம்.
யா/க/2265 திருமதி.நல்லநாயகம் சிவரத்தினம்.
யா/க/2272 திரு.நாகமுத்து சுப்பிரமணியம்.
யா/க/2276 திரு.வேலுப்பிள்ளை நவரத்தினம்.
யா/க/2277 திரு.ஆறுமுகம் சுப்பிரமணியம்.
யா/க/2292 திரு.ஆறுமுகம் கந்தசாமி.
யா/க/2306 திரு.சிவஞானம் பத்மநாதன்.
யா/க/2325 திருமதி.மங்கையற்கரசி வியாகேசு.
யா/க/2326 திருமதி.பரமேஸ்வரி மகேந்திரம்.
யா/க/2334 திரு.சபாபதிப்பிள்ளை முருகேசு.
யா/க/2342 திரு.முத்து விநாயகமூர்த்தி.
யா/க/2344 திரு.கணபதி இராசா.
யா/க/2346 திரு.கந்தையா மகாலிங்கம்.
யா/க/2349 திரு.சின்னவன் முருகுப்பிள்ளை.
யா/க/2351 திரு.கனகர் மாற்க்கண்டு.
யா/க/2352 திரு.வெள்ளையன் சிவலிங்கம்.
யா/க/2356 திரு.கனகசபை அருளானந்தம்.
யா/க/2358 திரு.செல்லையா நடராசா.
யா/க/2364 திரு.மயில்வாகனம் சிவபாதசுந்தரம்.
யா/க/2367 திரு.தம்பிப்பிள்ளை பசுபதி.
யா/க/2373 திருமதி.பூபதி குணரத்தினம்.
யா/க/2384 திரு.கோபால் துரைசிங்கம்.
யா/க/2388 திரு.விஸ்வலிங்கம் மோகனகுரு.
யா/க/2399 திருமதி.பாக்கியம் குணரத்தினம்.
யா/க/2413 திரு.நல்லதம்பி கந்தசாமி.
யா/க/2430 திரு.கிட்டிணபிள்ளை சின்னராசா.
யா/க/2437 திருமதி.பங்கயச்செல்வம் ஐயாமுத்து.
யா/க/2445 திருமதி.சீரங்கம் கந்தையா.
யா/க/2462 திருமதி.சிவக்கொழுந்து பாலசிங்கம்.
யா/க/2502 திரு.பொன்னையா கந்தையா.
யா/க/2504 திருமதி.சிவக்கொழுந்து பூபாலகிட்டுணர்.
யா/க/2506 திருமதி.காந்திஅம்மா சின்னராசா.
யா/க/2521 திருமதி.பூரணம் தர்மராஜா.
யா/க/2529 திருமதி.இராஜேஸ்வரி குமாரசாமி.
யா/க/2531 திருமதி.இராஜேஸ்வரி குமராசாமி.
யா/க/2539 திரு.இராமலிங்கம் சின்னராசா.
யா/க/2541 திரு.சின்னத்தம்பி சுப்பிரமணியம்.
யா/க/2545 திருமதி.காசிப்பிள்ளை நாகலிங்கம்.
யா/க/2554 திருமதி.வாலாம்பிகை பாலசுப்பிரமணியம்.
யா/க/2564 திருமதி.மகிமலீலா கணேசலிங்கம்.
யா/க/2569 திருமதி.சிவக்கொழுந்து வேலுப்பிள்ளை.
யா/க/2575 திரு.மாணிகம் சபாபதி.
யா/க/2580 திருமதி.சின்னத்தங்கம் கதிரவேல்.
யா/க/2595 திருமதி.குஞ்சுப்பிள்ளை பாலசிங்கம்.
யா/க/2608 திரு.சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை.
யா/க/2611 திரு.சீனியன் சின்னையா.
யா/க/2633 திருமதி.சின்னக்கண்டு கந்தையா.
யா/க/2637 திரு.கணபதிப்பிள்ளை சுந்தரவடிவேல்.
யா/க/2641 திருமதி.தங்கமணி சுப்பிரமணியம்.
யா/க/2644 திரு.கந்தையா கணபதிப்பிள்ளை.
யா/க/2648 திரு.சின்னத்துரை செல்லையா.
யா/க/2655 திருமதி.மாதேவிப்பிள்ளை கதிர்காமத்தம்பி.
யா/க/2666 திரு.சுப்பிரமணியம் திருநாவுக்கரசு.
யா/க/2676 திருமதி.சரஸ்வதி திருநாவுக்கரசு.
யா/க/2677 திரு.கனகசபை நல்லையா
யா/க/2693 திருமதி.லோரு சூசன் அதிசயம்இராசா.
யா/க/2701 திரு.இளையகுட்டி ஆறுமுகம்.
யா/க/2708 திரு.சுப்பிரமணியம் நாகலிங்கம்.
யா/க/2709 திருமதி.இன்பநிதி சித்திரவேல்.
யா/க/2715 திருமதி.பொன்னம்மா சின்னத்துரை.
யா/க/2716 திரு.முத்து இராஜதுரை.
யா/க/2717 திரு.வேலுப்பிள்ளை இரத்தினம்.
யா/க/2718 திருமதி.பாறுபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை.
யா/க/2719 திரு.முருகுப்பிள்ளை நாகலிங்கம்.
யா/க/2727 திரு.வேலுப்பிள்ளை இராமலிங்கம்.
யா/க/2734 திருமதி.தவமணி நாகமணி.
யா/க/2741 திரு.முருகுப்பிள்ளை துரைச்சாமி.
யா/க/2742 திரு.தாமோதரம்பிள்ளை முத்துவேல்.
யா/க/2743 திரு.வேலுப்பிள்ளை நாகரத்தினம்.
யா/க/2745 திருமதி.தங்கமணி மகேஸ்வரன்.
யா/க/2754 திரு.நடராசா அம்பிகாபதி.
யா/க/2760 திரு.ஐயாக்குட்டி சபாரத்தினம்.
யா/க/2763 திருமதி.ராசபூபதி கந்தசாமி.
யா/க/2775 திருமதி.அருமைமுத்து குலத்துங்கம்.
யா/க/2779 திருமதி.குணவதி சோமசுந்தரம்.
யா/க/2781 திரு.செல்லையா சிவகுரு.
யா/க/2793 திரு.வேலுப்பிள்ளை கந்தசாமி.
யா/க/2807 திரு.கிருஷ்ணர் தங்கவேலாயுதம்.
யா/க/2810 திருமதி.சீதேவன் கிருஷ்ணசாமி.
யா/க/2825 செல்வி.இராசமணி செல்லப்பா.
யா/க/2828 திரு.சுப்பிரமணியம் நவரத்தினம்.
யா/க/2842 திருமதி.பாக்கியம் இரத்தினம்.
யா/க/2843 திருமதி.செல்வத்திரவியம் செல்வராசா.
யா/க/2845 திருமதி.செல்லமுத்து சுவாமிநாதன்.
யா/க/2855 திரு.கதிரிப்பிள்ளை பாலசிங்கம்.
யா/க/2872 திரு.சின்னையா கந்தசாமி.
யா/க/2877 திரு.இராமுப்பிள்ளை நாகலிங்கம்.
யா/க/2884 திருமதி.மகேஸ்வரி பழனிப்பிள்ளை.
யா/க/2888 திருமதி.சரஸ்வதி அருளம்பலம்.
யா/க/2890 திரு.கணபதி கிட்டினன்.
யா/க/2896 திரு.வல்லிபுரம் நல்லதம்பி.
யா/க/2906 திரு.அருணாசலம் சதாசிவம்.
யா/க/2915 திரு.முருகேசு தங்கவேல்.
யா/க/2919 திரு.முருகேசு தர்மலிங்கம்.
யா/க/2925 திரு.கந்தப்பர் சுப்பிரமணியம்.
யா/க/2926 திரு.செல்லையா சண்முகநாதன்.
யா/க/2935 திரு.சின்னத்தம்பி சுப்பிரமணியம்.
யா/க/2938 திரு.சுவக்கீன் தேவசகாயம்அந்தோனி.
யா/க/2945 திரு.வீரகத்தி பாலசிங்கம்.
யா/க/2947 திருமதி.பாக்கியம் ஆறுமுகம்.
யா/க/2950 திரு.சின்னையா கிருஷ்ணபிள்ளை.
யா/க/2954 திரு.கனகசபை பாலகிருஷ்ணராசா.
யா/க/2961 திருமதி.மகேஸ்வரி சந்தரசேகரம்.
யா/க/2968 திரு.கதிர்காமு கந்தசாமி.
யா/க/2971 திரு.வேலுப்பிள்ளை தங்கராஜா.
யா/க/2982 திருமதி.கமலம் செல்லத்துரை.
யா/க/2995 திரு.கந்தன் குமாரன்.
யா/க/2997 திருமதி.தெய்வானை சின்னையா.
யா/க/2999 திருமதி.பவளம்மா தட்சணாமூர்த்தி.
யா/க/3006 திரு.கந்தையா கதிர்காமத்தம்பி.
யா/க/ 3007 திருமதி.மகேஸ்வரி மயில்வாகனம்.
யா/க/3015 திரு.ஆறுமுகம் சின்னத்துரை.
யா/க/3020 திரு.கந்தையா கணபதிப்பிள்ளை.
யா/க/3021 திரு.கார்த்திகேசு நல்லதம்பி.
யா/க/3033 திரு.நல்லதம்பி குருநாதபிள்ளை.
யா/க/3034 திரு.சின்னக்குட்டி இராசப்பு.
யா/க/3035 திரு.ஆறுமுகம் நடராசா.
யா/க/3043 திரு.கந்தையா குமரகுரு.
யா/க/3077 திரு.அல்போன்சியஸ் பர்ணாந்து.
யா/க/3094 திரு.நல்லதம்பி வசந்தன்.
யா/க/3100 திரு.ஆழ்வாப்பிள்ளை தம்பையா.
யா/க/3110 திரு.செல்லமுத்து சத்தியபாஸ்கரநாதன்.
யா/க/3126 திருமதி.சரோஜினிதேவி செல்லத்துரை.
யா/க/3133 திரு.வெள்ளையன் துரைராஜா.
யா/க/3138 திருமதி.சின்னாவி நல்லதம்பி.
யா/க/3139 திருமதி.மகேஸ்வரி சிவக்கொழுந்து.
யா/க/3149 திருமதி.நவமணி வல்லிபுரம்.
யா/க/3158 திரு.சின்னவன் நாகமணி.
யா/க/3159 திரு.சின்னத்தம்பி நடராசா.
யா/க/3160 திரு.சின்னத்தம்பி நடராசா.
யா/க/3172 திரு.கணபதிப்பிள்ளை கனகரத்தினம்.
யா/க/3174 திருமதி.பொன்னம்மா சின்னையா.
யா/க/3176 திரு.கனகசபைக்குருக்கள் வேதாரணியக்குருக்கள்.
யா/க/3179 திருமதி.சரஸ்வதி கனகசபை.
யா/க/3185 திரு.மயில்வாகனம் கதிரிப்பிள்ளை.
யா/க/3198 திரு.செல்லையா வாமதேவா.
யா/க/3205 திரு.சின்னையா விநாயகமூர்த்தி.
யா/க/ 3234 திரு.சின்னத்துரை தருமராசன்.
யா/க/3240 திருமதி.மகேஸ்வரி கந்தையா.
யா/க/3245 திருமதி.அன்னம்மா குருகுலசிங்கம்.
யா/க/3267 திரு.இளையதம்பி கணபதிப்பிள்ளை.
யா/க/3309 திரு.செல்லையா வாமதேவன்.
யா/க/3310 திரு.சபாபதிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை.
யா/க/3314 செல்வி.யோகேஸ்வரி சின்னத்துரை.
யா/க/3329 திரு.மாணிக்கம் தியாகராசா.
யா/க/3337 திரு.நாகலிங்கம் கந்தையா.
யா/க/3353 திருமதி.பொன்னம்மா செல்லையா.
யா/க/3354 திரு.கதிரன் கந்கண்டன்.
யா/க/3369 திரு.சின்னப்பு வெள்ளைக்குட்டி.
யா/க/3374 திரு.கணபதிப்பிள்ளை சிவகுரு.
யா/க/3377 திரு.செல்லத்துரை தங்கராசா.
யா/க/3378 திரு.நல்லதம்பி நடராசா.
யா/க/3379 திருமதி.செல்லம்மா செல்லையா.
யா/க/3381 திரு.சின்னத்தம்பி கோபாலகிருஷ்ணபிள்ளை.
யா/க/3399 திருமதி.பொன்னம்மா சுப்பிரமணியம்.
யா/க/3406 திரு.முத்து கிருஸ்ணபிள்ளை.
யா/க/3411 திருமதி.இராசம்மா மயில்வாகனம்
யா/க/3444 திரு.சிதம்பரம் குழந்தைவேலு.
யா/க/3449 திரு.வேலுப்பிள்ளை தர்மலிங்கம்.
யா/க/3450 திரு.சிதம்பரன் கந்தையா.
யா/க/3463 திரு.கந்தசாமி சுப்பிரமணியம்.
யா/க/3490 திரு.சரவணமுத்து கந்தையா.
யா/க/3495 திரு.வீரகத்திப்பிள்ளை இரத்தினம்.
யா/க/3496 திரு.காசியர் வேலுப்பிள்ளை.
யா/க/3500 திரு.சின்னத்தம்பி குட்டித்தம்பி.
யா/க/3504 திரு.ஆழ்வார் கணபதிப்பிள்ளை தம்பையா.
யா/க/3522 திரு.கதிரித்தம்பி கணபதிப்பிள்ளை.
யா/க/3532 திரு.கிட்டினர் ஐயாத்துரை
யா/க/3557 திரு.அரியகுட்டிப்பிள்ளை வைத்தீஸ்வரன்.
யா/க/ 3559 திரு.முருகர் கந்தையா ஆறுமுகம்.
யா/க/3565 திருமதி.விஜயலட்சுமி சிவகுருநாதன்.
யா/க/3577 திரு.கோபால் துரைசிங்கம்.
யா/க/3586 திரு.நவரத்தினம் பாலகிருஷ்ணன்.
யா/க/3595 திரு.சின்னத்தம்பி கந்தப்பு.
யா/க/3596 திரு.கணபதி குழந்தையன்.
யா/க/3599 திரு.ஆறுமுகம் சுப்பிரமணியம்.
யா/க/3600 திருமதி.ரேங்கம் முத்துத்தம்பி.
யா/க/3605 திரு.சின்னத்தம்பி தினசவீரசிங்கம்.
யா/க/3612 திரு.கந்தவனம் சின்னத்துரை.
யா/க/ 3619 திரு.குமாரசாமி சிவகுரு.
யா/க/3620 திரு.சின்னத்தம்பி சிதம்பரநாதன்.
யா/க/3624 திருமதி.இலட்சுமிப்பிள்ளை சுப்பிரமணியம்.
யா/க/3626 திரு.கணபதிப்பிள்ளை விநாயகம்பிள்ளை.
யா/க/3630 திருமதி.சேதுநாயகம் சிவசுப்பிரமணியம்.
யா/க/3648 திரு.ஆறுமுகம் கந்தசாமி.
யா/க/3650 திருமதி.அன்னம்மா நடராசா.
யா/க/3656 திருமதி.சரஸ்வதி புவிராயரட்ணம்.
யா/க/3662 திரு.சின்னட்டியாடி ஆட்புக்குட்டி.
யா/க/3663 திருமதி.குணமணி நல்லநாதன்.
யா/க/3675 திரு.முருகன் கந்தையா ஆறுமுகம்.
யா/க/3676 திரு.வேலுப்பிள்ளை நகுலேஸ்வரன்.
யா/க/ 3684 திரு.செல்லையா இரத்தினசிங்கம்.
யா/க/3690 திரு.விசுவர் கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம்.
யா/க/3707 திரு.சின்னையா கிருஷ்ணசாமி
யா/க/3722 திரு.முருகேசு நடராசா.
யா/க/3724 திரு.நாவலன் நடேசு.
யா/க/3736 திருமதி.சின்னம்மா நடராசா.

# தமிழீழ மீட்புநிதிக் கடன்மீளல்-2005

கரவெட்டி உதவி அரச அதிபர் பிரிவு


மூப்பின் அடிப்படையில் தெரிவானோர்

யா/க/3743 திரு நாகப்பர் சுப்ரமணியம்.
யா/க/3744 திருமதி.மகேஸ்வரி துரைராசா.
யா/க/3747 திரு.முத்தர் கதிரித்தம்பி.
யா/க/3748 திரு.முத்தர் கதிரித்தம்பி.
யா/க/3755 திரு.சிவகுரு கந்தவனம்.
யா/க/3756 திருமதி.செல்லம்மா நமசிவாயம்.
யா/க/3764 திருமதி.இராசம்மா சுப்பிரமணியம்.
யா/க/3766 திரு.சின்னத்தம்பி வடிவேல்.
யா/க/3772 திரு.சின்னத்துரை நடராசா.
யா/க/3775 திரு.கணபதி கிருஸ்ணபிள்ளை.
யா/க/3782 திரு.மயில்வாகனம் இராசரத்தினம்.
யா/க/3830 திரு.நாகநாதர் கதிரவேலு.
யா/க/3841 திரு.சுப்பையா யோகலிங்கம்.
யா/க/3842 திரு.சுப்பையா யோகலிங்கம்.
யா/க/3854 திரு.நிற்சிங்கம் சுந்தரசிங்கம்.
யா/க/3856 திரு.அப்புத்துரை நாகரத்தினம்.
யா/க/3859 திருமதி.இரத்தினம்மா தினகரிப்பிள்ளை.
யா/க/3868 திருமதி.பவளம் கணபதிப்பிள்ளை.
யா/க/3872 திரு.தம்பையா மாணிக்கம்.
யா/க/3880 திரு.தம்பு கனகராசா.
யா/க/3886 திரு.கந்தையா இரத்தினம்.
யா/க/3888 செல்வன்.சின்னத்துரை நாகராசா.
யா/க/3889 திரு.இளையவன் நமசிவாயம்.
யா/க/3895 திருமதி.சிவக்கொழுந்து செல்வநாயகம்.
யா/க/3897 திரு.நாகநாதர் சின்னத்துரை.
யா/க/3899 திரு.தாமோதரம்பிள்ளை மயில்வாகனம்.
யா/க/3900 திரு.நாகப்பர் இலட்சுமணன்.
யா/க/3903 திரு.கந்தையா தம்பையா.
யா/க/3904 திரு.கந்தையா தம்பையா.
யா/க/3905 திருமதி.மங்கையர்க்கரசி நாகேந்திரம்.
யா/க/3906 திரு.கதிரவேலு கனகசிங்கம்.
யா/க/3910 திரு.சுப்பிரமணியம் திருநாவுக்கரசு.
யா/க/3933 திருமதி.செல்வராணி சிவானந்தசுந்தரம்.
யா/க/3935 திரு.முத்து தம்பிராசா.
யா/க/3957 திரு.கந்தையா தில்லையம்பலம்.
யா/க/3958 திரு.ஆறுமுகம் கணபதிப்பிள்ளை.
யா/க/3971 திரு.சின்னத்தம்பி நவரத்தினம்.
யா/க/3972 திருமதி.சித்திரம் கதிரவேலு.
யா/க/3985 திரு.கணபதிப்பிள்ளை கந்தவனம்.
யா/க/3999 திருமதி.அன்னம்மா கார்த்திகேசு.
யா/க/4009 திருமதி.ஈச்சம்மா மயில்வாகனம்.
யா/க/4024 திரு.கந்தர் கதிரேசு.
யா/க/4068 திரு.வேலுப்பிள்ளை நாகமுத்து.
யா/க/4090 திரு.ஐயா வேலுப்பிள்ளை.
யா/க/4100 திருமதி.தவனேஸ்வரி கனகரத்தினம்
யா/க/4111 திருமதி.பொன்னம்மா குமாரசாமி.
யா/க/4114 திரு.வல்லிபுரம் கந்தசாமி.
யா/க/4140 திருமதி.நாகரத்தினம் மாணிக்கம்.
யா/க/4142 திரு.வாரிசரவணை.
யா/க/4147 திருமதி.இலட்சுமி நடேசன்.
யா/க/4152 திருமதி.சிவக்கொழுந்து சிவகுரு.
யா/க/4169 திரு.ஆழ்வாப்பிள்ளை தர்மலிங்கம்.
யா/க/4189 திரு.சின்னவன் சிவலிங்கம்.
யா/க/4191 திரு.சரவணை செல்லையா.
யா/க/4192 திருமதி.சின்னம்மா திருநாவுக்கரசு.
யா/க/4209 திரு.வல்லிபுரம் சுப்பிரமணியம்.
யா/க/4210 திரு.சின்னத்தம்பி இராமசாமி.
யா/க/4252 திரு.சுப்பிரமணியம் சபாரத்தினம்.
யா/க/4253 திரு.சபாபதி திருப்பதி.
யா/க/4268 திரு.கந்தையா நடராஜா.
யா/க/4277 திரு.குமாரசாமி வையித்திலிங்கம்.
யா/க/4295 திரு.சின்னத்தம்பி கணேஷ்.
யா/க/4321 திரு.முருகேசு இராசா.
யா/க/4324 திருமதி.சின்னம்மா தம்பு.
யா/க/4334 திருமதி.பகவதியம்மா கைலாசபிள்ளை.
யா/க/4340 திருமதி.பஞ்சாட்சரம் செல்லத்துரை.
யா/க/4344 திருமதி.செல்லமுத்தம்மா ஐயாப்பிள்ளை.
யா/க/4351 திரு.முருகர் கனகசிங்கம்.
யா/க/4362 திரு.பொன்னையா வீரகத்திப்பிள்ளை.
யா/க/4366 திரு.செல்லையா சின்னத்துரை.
யா/க/4374 திருமதி.நாச்சிப்பிள்ளை நல்லதம்பி.
யா/க/4375 திரு.பூதன் பசுவன்.
யா/க/4388 திருமதி.பவளம் அருளன்.
யா/க/4400 திரு.பர்னாந்துபோல் அந்தோனிப்பிள்ளை.
யா/க/4411 திரு.சின்னத்தம்பி நாகமுத்து.
யா/க/4415 திரு.கந்தையா பழனிப்பிள்ளை.
யா/க/4424 திரு.வல்லிபுரம் வேலாயுதம்.
யா/க/4425 திருமதி.இராசம்மா கந்தப்பு.
யா/க/4426 திரு.செல்லத்துரை சின்னத்துரை.
யா/க/4428 திரு.கந்தன் குழந்தையன்.
யா/க/4434 திருமதி.சிவக்கொழுந்து சண்முகராசா.
யா/க/4439 திரு.கணபதி அருமை.
யா/க/4443 திரு.சின்னத்தம்பி இராசா.
யா/க/4446 திரு.கந்தவனம் மார்க்கண்டு.
யா/க/4447 திருமதி.கனகம்மா வேலும்மயிலும்.
யா/க/4477 திரு.கார்த்திகேசு ஆறுமுகம்.
யா/க/4509 திரு.கோணன் சின்னப்பு.
யா/க/4524 திரு.தம்பு ஜெகதீசசிங்கம்.
யா/க/4526 திரு.கந்தர் வீரகத்தி.
யா/க/4534 திரு.வயித்தி ஆசீர்வாதம்.
யா/க/4541 திரு.மாணிக்கம் தியாகராசா.
யா/க/4555 திரு.குமாரசாமி வேலுப்பிள்ளை.
யா/க/4571 திரு.கனகசபைக்குருக்கள் தியாகராசக்குருக்கள்.
யா/க/4576 திரு.பொடியன் சண்முகம்.
யா/க/4579 திரு.சிலம்பு ஆறுமுகம்.
யா/க/4584 திரு.வேலுப்பிள்ளை தம்பிராசா.
யா/க/4641 திரு.சடையர் ஆறுமுகம்.
யா/க/4645 திருமதி.இலட்சுமிஅம்மா பொன்னையா.
யா/க/4654 திரு.சின்னையா செகராசசிங்கம்.
யா/க/4678 திரு.அப்பா கிட்டிணன்.
யா/க/4679 திரு.நாகப்பர் கணேசசிங்கராசா.
யா/க/4680 திருமதி.ராஜேஸ்வரி வேதாரணியம்.
யா/க/4687 திருமதி.கபிலவதி பஞ்சரட்ணம்.
யா/க/4701 திரு.நாகலிங்கம் கந்தையா.
யா/க/4708 திருமதி.தங்கம்மா கிருஷ்ணபிள்ளை.
யா/க/4716 திரு.ஆறுமுகம் சுப்ரமணியம்.
யா/க/4728 திரு.கந்தர் சின்னத்தம்பி.
யா/க/4738 திரு.சின்னப்பொடி கந்தையா.
யா/க/4740 திரு.பொன்னையா ஆறுமுகம்.
யா/க/4744 திரு.கணபதிப்பிள்ளை முருகேசு.
யா/க/4765 திரு.நல்லதம்பி சிவஞானம்.
யா/க/4770 திருமதி.ஞானாம்பிகை கதிரேசு.
யா/க/4772 திரு.குட்டிப்பிள்ளை ஐயாத்துரை.
யா/க/4789 திரு.தம்பாப்பிள்ளை சுப்பிரமணியம்.
யா/க/4790 திரு.நாகமுத்து சுப்பிரமணியம்.
யா/க/4823 திரு.தாமோதரம்பிள்ளை சுந்தரலிங்கம்.
யா/க/4826 திரு.சிதம்பரப்பிள்ளை இராசையா.
யா/க/4827 திரு.இராமலிங்கம் பரஞ்சோதி.
யா/க/4829 திரு.கந்தையா பத்மனாதன்.
யா/க/4848 திருமதி.கனகம்மா இரத்தினம்.
யா/க/4856 திரு.வல்லிபுரம் கந்தசாமி.
யா/க/4869 திரு.அ.கிறிஸ்தோப்பர் மனுவேல்பிள்ளை.
யா/க/4872 திருமதி.மனோன்மணி அம்பலம்.
யா/க/4890 திரு.வல்லிபுரம் கந்தையா.
யா/க/4901 திருமதி.மகேஸ்வரி இராஜரெட்ணம்.
யா/க/4906 திருமதி.பார்வதிப்பிள்ளை வேலுப்பிள்ளை.
யா/க/4915 திருமதி.தங்கம்மா ஆறுமுகம்.
யா/க/4923 திருமதி.கனகம்மா நடராசா.
யா/க/4930 திரு.சின்னவன் செல்லன்.
யா/க/4942 திருமதி.மகேஸ்வரி மாயவன்.
யா/க/4948 திரு.சித்தர் கதிர்காமு.
யா/க/4953 திரு.கணபதி தங்கவடிவேலு.

தொடரும்...




# பரபரப்பான இறுதியாட்டத்தில் இளந்தாரகை அணி சம்பியனானது


வெற்றிக் கிண்ணத்துடன் இளந்தாரகை


இரண்டாம் இடத்தைப் பெற்ற தோழர்கள்.

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச் சங்கம் முல்லைத்தீவு-கிளிநொச்சி மாவட்டங்களுக்கிடையில் நடாத்திய 15 ஓவர் மென்பந்து துடுப்பாட்டப் போட்டியில் இளந்தாரகை அணி சம்பியனானது.

தருமபுரம் இளந்தாரகை விளையாட்டு மைதானத்தில் நேற்று மாலை நடைபெற்ற இறுதிப் போட்டியில் தோழர்கள் அணியை மூன்று விக்கெட்டுக்களால் இளந்தாரகை அணி வெற்றி பெற்றது.

முதலில் ஆடிய தோழர்கள் அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 85 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் சுகிர்தன் 44 ஓட்டங்களையும், யூட் 14 ஓட்டங்களையும், கார்த்திபன் 13 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் சாந்தன், லோகீசன் தலா மூன்று விக்கெட்டுக்களையும், மயூரன் இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

86 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆட்டத்தை ஆரம்பித்த இளந்தாரகை அணி உள்ளூர் ரசிகர்களின் ஆதரவுடன் 14 ஓவர் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் பேனாட் 18 ஓட்டங்களையும், லோகீசன் 16 ஓட்டங்களையும், பிரபு 12 ஓட்டங்களையும் முறையே அதிகபட்சமாகப் பெற்றனர்.



பந்துவீச்சில் தினேஷ் இரண்டு விக்கெட்டுக்களையும், தர்மேந்திரா, விஜயதர்சன், சிவபாலன், உதயேந்திரன் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர். போட்டியின் சிறப்பாட்டக்காரராக லோகீசனும், தொடர் நாயகனாக சாரங்கனும் தெரிவாகினர்.

மேற்படி இறுதிப் போட்டிக்கு மத்தியஸ்தர்களாக சுபானந், குமார் ஆகியோர் கடமையாற்றினர்.

கிளி. மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச் சங்கத்தலைவர் செல்வரட்ணம் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வில் தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, தமிழீழ விளையாட்டுத் துறையைச் சேர்ந்த பத்மநாதன், தமிழீழ விளையாட்டுத்துறையின் நிதிப்பிரிவுப் பொறுப்பாளர் ராஜா, கிளி. மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் சிவமணி ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கியதுடன் பரிசில்களையும் வழங்கிக் கௌரவித்தனர்.

## வீடியோகான் இறுதி ஒருநாள் போட்டி நியூசிலாந்து-இந்தியா இன்று பலப்பரீட்சை





சிம்பாப்வேயில் இந்தியா, நியூசிலாந்து, சிம்பாப்வே அணிகளுக்கு இடையேயான முத்தரப்பு கிரிக்கெட் போட்டியில் லீக் ஆட்டங்களின் முடிவில் இந்தியா, நியூசிலாந்து அணிகள் இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றன.

இவ்இறுதிப் போட்டி இன்று ஹராரே மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

நியூசிலாந்து அணி ஐந்தாவது லீக் ஆட்டத்தில் இந்தியாவிடம் தோல்வி அடைந்திருந்தது. இதற்குப் பழிவாங்க இன்றைய ஆட்டத்தில் அந்த அணி சிறப்பாக ஆடும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த போட்டியில் ஆடாத வேகப்பந்து வீச்சாளர் பொண்ட், விட்டோரி ஆகியோர் இன்று களம் இறங்குகின்றனர். இதனால் அந்த அணி கூடுதல் பலம் பெறும்.

ஆடுகளத்தில் வின்சென்ட், ஆஸ்லே, பிளமிங், மெக் மில்லன் என்று ஒரு பெரிய பட்டாளமே உள்ளது. கடந்த ஆட்டங்களில் சரியாக ஆடாத ஆஸ்லே, வின்சென்ட் இன்றைய ஆட்டத்தில் சிறப்பாக ஆடி ஓட்டம் குவிக்க முயற்சிப்பார்கள்.

இந்திய அணியைப் பொறுத்த வரையில் பந்து வீச்சில் பதான், அகார்கர் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றனர். மேலும் துடுப்பாட்டத்தில் யுவராஜ்சிங் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பியுள்ளார். இதனால் தற்போது துடுப்பாட்டத்தில் சற்று முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

கடைசியாக நடந்த இரண்டு ஆட்டங்களிலும் இந்திய அணியின் மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர்கள் நல்ல முறையில் ஆடி அணியை வெற்றிபெறச் செய்துள்ளனர். முதலில் விக்கெட்டுக்கள் சரிந்தாலும் பின்பு நிலைத்து நின்று ஆடி அணியை அவர்கள் வெற்றிப்பாதைக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

இந்திய அணிக்கு பொண்ட் மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருந்து வருகிறார். அவரது ஆக்ரோசமான பந்து வீச்சை இந்திய வீரர்கள் சமாளிக்கத் திணறுகின்றனர். இதைத் தவிர்க்க இறுதிப்போட்டியில் இந்திய வீரர்கள் முயற்சிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. கங்குலி தலைமையிலான இந்திய அணி இதுவரை ஒருநாள் கிரிக்கெட் ஆட்டங்களில் 13 இறுதிப் போட்டியிலும் ராவிட் தலைமையில் ஒரு போட்டியிலும் தொடர்ந்து தோற்றுள்ளது..

இத்தொடர் தோல்விகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக இந்திய அணி வெற்றிபெறுமா என்பது இன்றைய ஆட்டத்தில் தெரியும்.

## யுவராஜ் சிங், தோனி அதிரடி துடுப்பாட்டம் நான்கு விக்கெட்டுக்களால் இந்தியாவுக்கு வெற்றி



வீடியோகான் முத்தரப்பு கிரிக்கெட்டின் கடைசி லீக் போட்டியில் இந்தியா நான்கு விக்கெட் வித்தியாசத்தில் சிம்பாப்வே அணியை வெற்றி கொண்டது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று களத்தடுப்பில் ஈடுபட முடிவு செய்து சிம்பாப்வே அணியை துடுப்பாடப் பணித்தது.

சிம்பாப்வேயின் துடுப்பாட்டம் முன்னைய போட்டிகளைவிடச் சிறப்பாக அமைந்தது. அணித் தலைவர் டைபு (71), இளம்வீரர் கவென்டரி (74), ஆன்டிபிளிக்னட் (26 பந்துகளில் 41) என அணி 250 ஓட்டங்களைப்பெற உதவினர். இந்தியாவிற்கு 251 வெற்றியிலக்கை நிர்ணயிக்கப்பட்டது.

களமிறங்கிய இந்தியாவின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களின் ஆட்டம் படுமோசமானதாக இருந்தது. சேவாக் (12), கங்குலி (02), ராவிட் (06) கைப் (08) என அடுத்தடுத்து வெளியேறினர். இந்நிலையில் 36 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட் என்ற நிலை இருந்தது. 'சப்பர் சப்ஸ்யூட்' வேனுகோபால் 27 ஓட்டங்களுக்கு வெளியேற 91 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட்டுக்கள் இழக்கப்பட்டன. ஆனால், அதற்குப் பின் வந்த மகேந்திரசிங் தோனி கைகொடுத்தார்.

ஒரு முனையில் யுவராஜ் மறுமுனையில் தோனி விளாசித் தள்ளினர். 12 பவுண்டரி ஒரு சிக்சருடன், யுவராஜ் சதம் (120) அடிக்கமூன்று சிக்சர் ஒரு பவுண்டரியுடன் ஆட்டமிழக்காமல் தோனி அரைச்சதம் (67) அடிக்க ஆறாவது விக்கெட்டுக்கு 140 பந்துகளில் இந்த ஜோடி 158 ஓட்டங்கள் சேர்த்தனர். சிக்சர் அடித்து ஆட்டத்தை முடித்தார் தோனி. 48.1 ஓவரில் இந்தியா ஆறு விக்கெட்டுக்கு 255 ஓட்டங்கள் எடுத்து நான்கு விக்கெட்டுக் களில் வெற்றிபெற்றது. போட்டியின் சிறப்பாட்டக்காரராக யுவராஜ்சிங் தெரிவானார்.




## மன்னார் மாவட்ட கராத்தேப் போட்டி

மன்னார் மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி நிறுவனத்தினரால் மன்னார் அல் அசார் மத்திய மகாவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் மாவட்ட கராத்தேப் போட்டி இடம்பெற்றது.

மன்னார் அரச அதிபர் தலைமையில் இடம்பெற்ற இப்போட்டியில் 20 இற்கும் மேற்பட்ட கழகங்கள் பங்கெடுத்தன. இதில் தள்வாடு, பேசாலை, வங்காலை, மன்னார் போன்ற கழகங்களைச் சேர்ந்த வீரர்கள் தமது திறமையை வெளிப்படுத்தினர் .

இதற்கான சகல ஏற்பாடுகளையும் விளையாட்டுக் கழக சம்மேளனத்தின் செயலாளர் மேற்கொண்டார். (18)

## ஐந்தாவது போட்டியில் மெக்ராத்



இங்கிலாந்துக்கு எதிரான ஐந்தாவதும் இறுதியுமான ஆஷஸ் டெஸ்ட் போட்டியில் மெக்ராத் பங்கேற்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐந்தாவது மற்றும் கடைசிப் போட்டி வரும் எட்டாம் திகதி லண்டன் ஓவல் மைதானத்தில் தொடங்குகிறது. இதில் அவுஸ்திரேலிய அணி வெற்றிபெற வேண்டிய கட்டாயத்தில் களமிறங்குகிறது. முக்கியமான இப்போட்டியில் இந்த அணியின் நம்பிக்கை நட்சத்திரமான மெக்ராத் மீண்டும் களமிறங்குகிறார். கணுக்கால் மற்றும் முழங்கை காயம் காரணமாக இரண்டு டெஸ்டில் மெக்ராத் பங்கேற்கவில்லை. தற்போது பூரண குணமடைந்துள்ள இவர் அணிக்குத் திரும்புவது அவுஸ்திரேலியாவுக்கு புதிய நம்பிக்கை அளித்துள்ளது. முதலாவது மற்றும் மூன்றாவது டெஸ்டில் விளையாடிய மெக்ராத் 14 விக்கெட் வீழ்த்தியுள்ளார். இவரது வருகை இங்கிலாந்து அணிக்கு கட்டாயம் நெருக்கடி அளிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## வெளியேறினார் சானியா மிர்சா காலிறுதிக்கு முன்னேறினார் ஷரபோவா



அழகானமோதலில் கொஞ்சம் போராடிய திருப்தியோடு வெளியேறினார் சானியா மிர்சா. எதிர்பார்த்தது போல வெற்றிபெற்ற முதல் நிலை வீராங்கனை ஷரபோவா காலிறுதிக்கு முன்னேறினார். இவர் காலிறுதியில் சக நாட்டு வீராங்கனை பெத்ரோவாவைச் சந்திக்கிறார்..

நியூயோர்க்கில் அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த பெண்கள், ஒற்றையர் நான்காம் சுற்றில் இந்தியாவின் நட்சத்திர வீராங்கனை சானியா, ரஷ்யாவின் கவர்ச்சி நாயகி ஷரபோவாவைச் சந்தித்தார். இருவருமே 18 வயது இளம் பெண்கள் என்பதால் போட்டியில் அதிக ஆர்வம் காணப்பட்டது. உலக தர வரிசையில் 42ஆவது இடத்தில் உள்ள சானியா தொடக்கத்தில் நல்ல போட்டியைக் கொடுத்து ஆதிக்கம் பெற்றார். முன்னணி வீராங்கனை மரியாவின், சர்வீசை பிரேக் செய்து அசத்தினார். ஆனாலும் அசுர வேகத்தில் சர்வீஸ் செய்த மரியா முதல் செட்டை 6-2 என்ற கணக்கில் 32 நிமிடங்களில் வென்றார்.. அடுத்த செட்டிலும் ஆதிக்கம் செலுத்திய மரியா 6-2,6-1 என்ற நேர் செட்களில் சுலப வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார். அமெரிக்க ஓபன் நான்காம் சுற்றில் விளையாடிய முதல் இந்திய வீராங்கனை என்ற பெருமையோடு விடைபெற்றார். சானியா..



பங்களாதேஷுக்கு எதிரான ஒரு நாள் கிரிக்கெட் தொடரை சிறிலங்கா அணி 3-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. வெற்றிக் கிண்ணத்துடன் சிறிலங்கா அணித் தலைவர் மார்வன் அத்தப்பத்து.


## இந்திய அணியில் முன்னேற்றம்


-வசீம் அக்ரம்

கிரெக்சப்பல் பயிற்சியாளரான பின்னர் இந்திய அணியில் நிறைய முன்னேற்றங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக களத்தடுப்பில் அசத்துகிறார்கள். ஹராரேயில் நடந்த நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் யுவராஜ்சிங், அகார்கர் துடிப்பான களத்தடுப்பு மூலம் இரண்டு ரன் அவுட்களை செய்தனர். இதனால் வலுவான நிலையில் இருந்த நியூசிலாந்தை 300 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்த முடிந்தது என்கிறார் பாக் முன்னாள் வீரர் வசிம் அக்ரம்.

ஒருநாள் போட்டியில் மீண்டும் அகார்கருக்கு வாய்ப்பளித்தது வரவேற்கத்தக்கது. அகார்கரும் இத்தொடரில் சிறப்பாகச் செயற்பட்டுள்ளார். தவிர கைப், முதல் விக்கெட்டுக்கு களமிறங்குவது சரியான முடிவு. நிதானமாகவும், அதிரடியாகவும் ஆடத்தெரிந்தவர் என்பதால் இந்த இடத்திற்கு கைப் மிகவும் பொருத்தமானவர். ஆனால் சச்சின் அணிக்குத் திரும்பிய பின்னர் இதே இடத்தில் இவர் களமிறக்கப்படுவாரா என்பது சந்தேகம் தான். என்னைப் பொறுத்தவரையில் கைப் இதேபோல் களமிறங்குவதே இந்திய அணிக்குக் கூடுதல் பலம் அளிக்கும் கங்குலியின் மோசமான துடுப்பாட்டம் இன்னும் தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறது. விரைவில் தனது தவறுகளைத் திருத்திக் கொள்வது அவருக்கும் அணிக்கும் நல்லது என்றார் அக்ரம்.

## சிந்தனைக்கு



சிங்களப் பயங்கரவாதமானது எமது தேசிய ஆன்மாவில் விழுத்திய வடுக்கள் என்றுமே மாறப்போவதில்லை.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 06.09.2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# எத்தனை நாட்களுக்கு...!

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் மீதும், அவர்களின் பணிமனைகள் மீதும் **மீண்டும்** தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தவகையில் கடந்த வாரத்திற்குள் இருவேறு தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதோடு இரு போராளிகள் கொல்லப்பட்டும், பணிமனைகள் சேதமாக்கப்பட்டுமுள்ளன.

இத்தகைய தாக்குதல்களுக்கு யார் பொறுப்பு என்பது பற்றிய ஆய்வு எதுவுமே தேவையில்லை. இவற்றின் பின்னணியில் சிறிலங்கா ஆயுதப்படையினரே உள்ளனர். சிலவேளைகளில், இவ்ஆயுதப் படைத் தரப்பில் ஒரு தாக்குதலுக்கு இராணுவத்தினர் பொறுப்பாக இருந் திருக்கலாம். இன்னொரு தாக்குதலுக்கு விசேட அதிரடிப்படை பொலீஸ் காரணமாக இருந்திருக்கலாம். இதுவே வேறுபாடாக இருக்க முடியாது.

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலையுடன் எழுந்த யுத்தநிறுத்த உடன்பாட்டின் அமுலாக்கம் தொடர்பாக விவாதிப்புக்கள், பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கப்படலாம் என்ற நிலையை உருவாக்கின. ஆனால் அந்நிலை தோல்வியடைய மீண்டும் இத்தாக்குதல்கள் தொடங்கப் பட்டுள்ளன. ஆகையினால் இத்தாக்குதல்கள் முன்னைய தாக்குதல்களின் தொடர்ச்சியா அன்றிப் புதிய தாக்குதல்களின் தொடக்கமா என்ற வினாவும் உள்ளது.

ஆனால், தாக்குதல்கள் பழையவற்றின் தொடர்ச்சியோ அன்றிப் புதியவற்றின் ஆரம்பமோ எதுவாக இருப்பினும் இத்தாக்குதல்கள் யுத்தநிறுத்த உடன்பாட்டிற்கு விடுக்கப்படும் சவாலில் இருந்து நடைபெறப்போகும் சனாதிபதித்தேர்தல் வரையில் தொடர்புபட்டதாகியுள்ளதெனில் மிகையாகமாட்டாது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களுக்கு சிறிலங்கா ஆயுதப்படைத் தரப்புமே பொறுப்பென பலதடவை வலியுறுத்தப்பட்டது. ஆனால் சிறிலங்கா அரசாங்கஆயுதப்படைத்தரப்பு யதார்த்தத்தையும், கள நிலவரத்தையும் முற்றாக நிராகரிக்கும் வகையில் தமக்கும் இத் தாக்குதலுக்கும் தொடர்பில்லை எனக் கூறிவருகின்றது.

ஆனால் சிறிலங்கா படைத்தரப்பு இதனை ஏற்றுக்கொள்கின்றதோ இல்லையோ இத்தாக்குதல்கள் யுத்த நிறுத்தத்திற்கு விடுக்கப்படும் சவாலாகவே கொள்ளத்தக்கதாகும். அதாவது யுத்தநிறுத்த உடன்பாட்டில் கையொப்பமிட்டு அமுல் படுத்திவரும் ஒரு தரப்பின் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் எத்தனை காலத்திற்கு அனுமதிக்கப்படும், பொறுமையாக ஏற்றுக்கொள்ளப்படும் என்பதே கேள்விக்குரியதாகும்.


யுத்தநிறுத்த உடன்பாட்டு அமுலாக்கத்தை மேம்படுத்தும் வகையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவிருந்த நிலையில், அரசாங்கத்தால் அது கைவிடப்படும் வகையில் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டபோதே அரசாங்கம் தேர்தல் காலத்தையும் ஒரு பதற்றமான சூழ்நிலையுடன் நடத்தவிரும்புவது வெளிப்படுத்தப் பட்டது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவசரகாலச் சட்டத்தின் கீழும், யுத்தநிறுத்த சூழலிலும் தேர்தலை நடத்துவதில் அனுபவம் கொண்டவர். மறுவளமாகக் கூறுவதானால், நெருக்கடியானதொரு சூழலில் தேர்தலை நடத்துவதன்மூலம் எவ்வாறு தேர்தலில் வெற்றி பெறுவது என்பது குறித்து நன்கு அறிந்துகொண்டவர்.

இந்நிலையில்தான் யுத்தநிறுத்த அமுலாக்கம் தொடர்பான பேச்சுவார்த்தை பின்தள்ளப்பட்டு / கைவிடப்பட்டு அவசரகாலச் சட்டமும் அமுலாக்கப்பட்டுள்ளது. அவசரகாலச் சட்ட அமுலாக்கல் மூலம் யுத்தநிறுத்த உடன்பாட்டை முடிவிற்குள்ளாக்கும் வகையில் நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டும் உள்ளன.

அரசாங்கத்தின் இத்தகைய நடவடிக்கைகள் யுத்தத் திற்குள் விடுதலைப் புலிகளை வலிந்து இழுக்கும் நடவடிக்கை என்பது அனைவருக்கும் தெரிந்ததொன்று. அத்தோடு, இத்தகைய தொடர் சீண்டல்கள் பொறுத்துக் கொண்டுவாழாவிருக்க முடியாது என்பதும் அனைவருக்கும் தெரிந்ததொன்றே.

அதாவது தேர்தலின் முன்னர் எவ்வாறாயினும் , முழு அளவிலான யுத்தத்தை ஆரம்பிக்காது விட்டாலும் அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் அளவிலான மோதல்களைத் தோற்றுவிக்க அரசாங்கமும்,ஆயுதப்படைத்தரப்பும் முற்படுவதாகவே கருத வேண்டியுள்ளது. இந்நிலையில் சில நோக்கர்கள் / விமர்சகர்கள் யுத்தநிறுத்த உடன்பாட்டைப் புலிகள் முறித்துக்கொள்ளக்கூடாது என அபிப்பிராயப்படலாம். ஆனால் தமிழ்மக்களைப் பொறுத்து தேர்தல் என்பது அர்த்தமற்றதாக இருக்கையில் யுத்தநிறுத்தம் என்ற ரீதியில் எத்தனை நாட்களுக்குத்தான் இழப்புக்களைத் தாங்கிக்கொண்டு இருப்பது? என்ற கேள்வி முதன்மையானதாக உள்ளது.




# நீதியான தேர்தலை நடத்த உதவுவதாக சனாதிபதி வேட்பாளர்களிடம் உறுதிமொழி

## – கையெழுத்து வாங்க 'பவ்ரல' அமைப்பு முயற்சி

சிறிலங்கா சனாதிபதித் தேர்தலை நீதியான நேர்மையான முறையில் நடத்த பங்களிப்பு வழங்குவேன் என்று தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களிடமிருந்து பவ்ரல் அமைப்பு உறுதிமொழியைப் பெறவுள்ளது.

இது தொடர்பான ஆவணத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ, ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க, புதிய இடதுசாரி முன்னணியின் வேட்பாளர் ஆகியோரிடம் இவ்வாரம் கையெழுத்துக்களைப் பெறவுள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று இயக்குனர் கிங்ஸ்லி ரொட்றிக்கோ தெரிவித்தார்.

இதுவரை நடைபெற்ற தேர்தல்களில் நடந்த வன்முறைகளினால் ஏற்பட்ட அழிவுகளைக் கருத்திற் கொண்டு இம்முறை தேர்தலை நீதியான நேர்மையான தேர்தலாக நடாத்துவதற்கு அனைத்து மாவட்ட அமைப்பாளர்களையும் வழிநடத்துவதாக இவ்வேட்பாளர்களிடம் உறுதி மொழிகள் பெறப் படவுள்ளன.

# ஜே.வி.பி யின் சுவரொட்டி நோய் ராஜபக்ஷவிற்கும் தொற்றியுள்ளது

## – ஐ.தே.க.பா.உ. லயனல் பிரேமசிறி

ஜே.வி.பி யினரின் சுவரொட்டி நோய் தற்போது பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிற்கும் தொற்றியுள்ளது. சுவரொட்டிகளுக்காக பல இலட்சக் கணக்கான பணத்தை அவர் செலவு செய்து வருகின்றார். இந்தப் பணத்தை நாட்டின் அபிவிருத்திக்காக செலவு செய்யலாம், அல்லது கடல் கோளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக செலவு செய்யலாம். இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் லயனல் பிரேமசிறி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சுவரொட்டிகளை அவர் நாடு பூராக ஒட்டினாலும் எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றி உறுதியே.

ஜே.வி.பி யினர் சுவரொட்டிகளை ஒட்டுவதில் சாதனை படைத்திருந்தனர். அந்தச் சாதனையை மகிந்த ராஜபக்ஷ முறியடித்து வருகின்றார். பொதுஜன ஐக்கிய முன்னணியினரும், ஜே.வி.பி யினரும் இணைந்து மகிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவளித்து சனாதிபதித் தேர்தலில் போட்டியிட வைத்துள்ளனர். ஆனால் எதிர்வரும் சனாதிபதித்தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றி உறுதி என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# நுரைச்சோலை அனல் மின் நிலையத்துக்கு இ.மி.ச.தொழிற்சங்கங்கள் ஆதரவு

நுரைச்சோலை அனல் மின் நிலையம் நிர்மாணிக்கப்படுவதற்கு தாம் பூரண ஆதரவு தெரிவிப்பதாக இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்கங்களின் இணையம் தெரிவித்துள்ளது.

இந்த அனல் மின் நிலையம் தொழிற்பட ஆரம்பித்ததன் பின்னர் மின்சாரக் கட்டணத்தைக் குறைக்கக் கூடியதாக இருக்கும் எனவும் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

ஒரு பீப்பா எண்ணெயின் விலை 70 அமெரிக்க டொலர்வரையில் உலக சந்தையில் உயர்ந்துள்ள இந்த நிலையில், எமது முழு மின்சார தேவைகளுக்கென, எண்ணெயை உபயோகிப்பது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் இந்த தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தை செயற்படுத்துவதன் மூலம் அதிக அளவில் எண்ணெயை வாங்க வேண்டிய நிலைமை ஏற்படாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# பங்களாதேஷ் விமானப்படைத்தளபதி சிறிலங்காவிற்கு வருகை

ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு பங்களாதேஷ் விமானப்படைத் தளபதி எயா வைஸ் மாஷல் பக்குறுள் அசாம் நேற்று முன்தினம் கொழும்பிற்கு வந்துள்ளார்.

இவர் இங்கு தங்கியிருக்கும் காலப்பகுதியில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் அசோக்க ஜயவர்த்தன உட்பட பல அதிகாரிகளையும் சந்தித்து உரையாடவுள்ளார்.

இது தவிர அவர் கட்டுநாயக்க, அனுராதபுரம், மற்றும் தியத்தலாவை விமானப்படைத் தளங்களுக்கும் விஜயம் செய்யவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (32)

## மன்னாரில் கைக்குண்டுத்தாக்குதல் சிறை அதிகாரியின் வீடு சேதம்

மன்னாரில் நேற்று திங்கட் கிழமை இனந்தெரியாத குழுவினர் கைக்குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

ஈ.பி.டி.பி அலுவலகத்தை இலக்கு வைத்தே இத்தாக்குதல் நடாத்தப்பட்டதாகவும் ஆனால் குறி தவறியதால் அருகாமையிலிருந்த வீட்டின் முன்பகுதி சேதமடைந்ததாகவும் சிறிலங்காப் பொலிசார் தெரிவித்தனர்.

சேதமடைந்த வீட்டு உரிமையாளர் இன்னாசிமுத்து பெனெடிக்ட் என்ற ஓய்வுபெற்ற சிறை அதிகாரிக்குச் சொந்தமானது. சம்பவம் நடந்தபோது அந்தவீட்டில் மூன்று பெண்கள் இருந்துள்ளனர்.

இந்த தாக்குதல் குறித்து பொலிஸ் அதிகாரி தென்னக்கோன் நேரடி விசாரணை நடத்தி சம்பவ இடத்தையும் பார்வையிட்டார். சிறிலங்கா போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினரும் சம்பவ இடத்தைப் [illegible]யிட்டுள்ளனர்.

# மலையகத்தில் கடும் மழை,மண் சரிவு

## 6 பேர் பலி; கிராமங்கள் பல நீரில் மூழ்கும் அபாயம்

(கொழும்பு)

மலையகத்தில் பெய்துவரும் கடும் மழையினால் ஏற்பட்ட மண்சரிவினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உட்பட ஆறு பேர் மண்ணில் புதையுண்டு உயிரிழந்துள்ளனர். இதே வேளை, தென்பகுதியில் நேற்று முன் தினம் முதல் பெய்துவரும் மழையினால் களுத்துறை, இரத்தினபுரி மாவட்டங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

பலாங்கொடையில் நேற்றுக் காலை ஏற்பட்ட மண்சரிவினால் வீட்டில் இருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் மண்ணில் புதையுண்டு உயிரிழந்தனர். இவர்களின் உடல்கள் மீட்கப்பட்டு பலாங்கொடை மருத்துவ மனையில் வைக்கப்பட்டுள்ளதாக பலாங்கொடை பொலிசார் கூறியுள் ளனர்.

இதேவேளை, நோர்வூட் தோட்டத்தில் நேற்றுக் காலை ஏற்பட்ட மண்சரிவில் ஒருவர் உயிரிழந்துள்ளார். அதேநேரம் டிக்கோயா எபர்சன் தோட்டத்தில் ஏற்பட்ட மண்சரிவினால் ஒருவர் உயிரிழந்ததுடன் மூவர் காயமடைந்துள்ளனர். காயமடைந்த இம்மூவரும் கிளர்சன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, களுத்துறை இரத்தினபுரி மாவட்டங்களில் பெய்து வரும் கடும்மழையினால் பல வீதிகள் மூடப்பட்டுள்ளதுடன் பெருமளவு வயல்கள் நீரில் மூழ்கிவிட்டதாகவும் கூறப்படுகின்றது.

# செங்கலடி,முறக்கொட்டாஞ்சேனை, சித்தாண்டியில் இராணுவத்தினர் மீது இனந்தெரியாதோர் தாக்கு

### ஒருவர் பலி;மூவர் காயம்

செங்கலடியில் துப்பாக்கிச் சூடு மற்றும் குண்டுத் தாக்குதலில் இராணுவச் சிப்பாய் பலியானார், மற்றொருவர் காயமடைந்தார் மட்டக்களப்பு வாழைச்சேனைச் வீதி செங்கலடிச் சந்தியில் நேற்று திங்கட்கிழமை மாலை 5.00 மணியளவில் சிறிலங்கா இராணுவச் சிப்பாய் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் மற்றொரு சிப்பாய் படுகாயமடைந்துள்ளார்.

கைக்குண்டுத் தாக்குதலையும் துப்பாக்கிச்சூட்டையும் இனந்தெரியாத குழுவினர் மேற்கொண்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.இச் சம்பவத்தில் சுட்டுக் கொல்லப்பட்டவர் கொம்மாந்துறை இராணுவ முகாமில் பணியாற்றிய ஆர்.பி பண்டார என்பவர் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

அவர் வழமை போல் வீதிக் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதே இத் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தையடுத்து அந்த இடத்திற்கு விரைந்த சிங்கள இராணுவத்தினர் ஆத்திரமடைந்த நிலையில் பொது மக்களைத் தாக்கியதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டம் முறக்கொட்டாஞ்சேனை மற்றும் சித்தாண்டிப் பகுதிகளில் நேற்று மாலை இனந்தெரியாதோர் நடத்திய தாக்குதலில் இரண்டு சிப்பாய்கள் காயமடைந்து பொலநறுவை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொலநறுவையில் இருந்து மட்டக்களப்பை நோக்கிப் பயணித்த இராணுவத் தொடரணிக்கு பாதுகாப்பு வழங்க வீதிரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த படைச்சிப்பாய்களே காயமடைந்ததாக பொலிசார் தெரிவித்துள்ளனர். இதே வேளை மட்டக்களப்பு ஸாகிராக் கல்லூரி நலன்புரி முகாமின் மீது நேற்று மாலை 5.45 இற்கு நடத்தப்பட்ட கைக்குண்டு வீச்சில் 14 வயதுடைய நடசேலிங்கம் கிருஸ்ணகாந் என்பவர் காயங்களுக்குள்ளாகி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## யாரை....

கட்சி அமைப்பாளர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏனைய மாவட்டங்களின் கட்சி முக்கியஸ்தர்கள் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை சனாதிபதித் தேர்தலில் குறிப்பிட்ட முக்கிய நிபந்தனைகளின் அடிப்படையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கே ஆதரவு அளிப்பது என்ற முடிவை முஸ்லிம் காங்கிரஸ் எடுக்கலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதற்கிடையில் முஸ்லிம் காங்கிரசில் இருந்து வெளியேறிச் சென்ற கிழக்கின் முக்கிய அரசியல் பிரமுகர்களும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுமான எம். எல். ஏ.எம் ஹிஸ்புல்லா மற்றும் ஹரீஸ் ஆகியோர் உள்ளிட்ட பலர் மீண்டும் அக்கட்சியுடன் இணையவுள்ளதாகவும் தெரியவருகிறது. (32)

## சொந்த...

உள்ளன. இவை எல்லாம் அடிப்படையில் யுத்த நிறுத்த மீறல் என்றும் இம் மகஜர்களில் சுட்டிக் காட்டப்பட்டிருப்பதுடன் இந்த யுத்த நிறுத்த மீறலை தடுக்க கண்காணிப்புக் குழு எதுவும் செய்யவில்லை என விசனமும் தெரிவித்துள்ளனர். (33)

## மகிந்த....

01) ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பை சிறிலங்கா தலைமை நீதிமன்றம் முடக்கி வைத்துள்ளது. முன்னைய பொதுக்கட்டமைப்பைக் கைவிட்டு விட்டு ஆழிப்பேரலை மீளமைப்புப் பணிகளை அரசினூடாக மேற்கொள்ளப்படும் வகையில் புதிய செயற்திட்டத்தை உருவாக்க வேண்டும்.

02) இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மட்டுமல்லாது இதர கட்சிகளுடனும் அமைதிப் பேச்சுக்கள் நடாத்தப்பட வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகளுக்குத் தன்னாட்சி அதிகார சபை உள்ளிட்ட எதுவித அரசியல் மற்றும் நிர்வாக அதிகாரங்களை அளிக்கும் வகையில் அப்பேச்சுக்கள் இருக்கக் கூடாது.

03) இனப்பிரச்சினைக்கு முன்வைக்கப்படுகிற எந்தத் தீர்வும் சிறிலங்கா என்கிற ஒற்றையாட்சிக் கோட்பாட்டைப் பாதுகாக்கும் வகையிலேயே அமைய வேண்டும்.

04) 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் ரணில் விக்கிரமசிங்க உருவாக்கிய யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாக மறுபரிசீலனை செய்ய வேண்டும். சிறிலங்காவின் அரசியல் சாசனத்துக்கு ஏற்பில்லாத, சிறிலங்காவின் தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கிற யுத்த நிறுத்த ஒப்பந்த சரத்துக்கள் அனைத்தையும் அதிலிருந்து முழுமையாக நீக்க வேண்டும்.

05) சிறிலங்கா அரசுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே அனுசரணையாளராகச் செயற்பட்டு வரும் நோர்வேத் தரப்பினர் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு பக்க சார்பாக செயற்பட்டு வருகின்றனர். யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைக் கண்காணிக்கும் பணியில் கண்காணிப்புக் குழு முழு அளவில் தோல்வியடைந்துவிட்டது. இந்த நிலையில் அனுசரணையாளராக நோர்வே பணியாற்றுவது தொடர்பாக மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

06) தமிழீழ விடுதலைப்புலிகளால் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மனித உரிமைகள், சனநாயகம், சட்டம், ஒழுங்கு ஆகியவை முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இந்தப் பிரச்சினைகளை முதன்மைப் பணியாகக் கொண்டு சிறிலங்காவில் மூவின மக்களும் எவ்வித அச்சமுமின்றி வாழ்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இம்மாகாணங்களில் அனைத்து சனநாயக ரீதியான அரசியல் கட்சிகளும் செயற்படும் வகையில் பல கட்சி அரசியல் முறையை மீளவும் செயற்படுத்த முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

07) சிறிலங்காவின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி ஆட்சி முறையானது சிறிலங்காவின் சனநாயகத்தை சீர்குலைக்கக்கூடியது. இந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி ஆட்சி முறையை நீக்குவதை முதன்மைப் பணியாகக் கொள்ள வேண்டும். இதை 2005ஆம் ஆண்டு தொடங்க உள்ள ஆறாவது சனாதிபதியின் பதவிக் காலத்தின் தொடக்கத்திலேயே செயற்படுத்த வேண்டும்.

08) சிறிலங்காவின் தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்காக தாராளமயமாக்கல் பொருளாதாரக் கொள்கையை எந்தக் கட்சியும் ஏற்றுக்கொள்ளக்கூடாது. சிறிலங்காவின் தேசியப் பொருளாதாரக் கொள்கையானது சமச்சீரான பொருளாதாரக் கொள்கையாக இருக்க வேண்டும்.

09) தேசியப் பொருளாதாரத்தின் மையமாக விளங்குகிற துறைமுகங்கள், விமானத் தளங்கள், பெற்றோலியக் கூட்டுத் தாபனம், அரச வங்கிகள், சிறிலங்கா மின்சார சபை உள்ளிட்ட அனைத்து அரச நிறுவனங்கள் மற்றும் நீர், கனிய வளங்கள் ஆகியவற்றை தனியார் மயமாக்கக்கூடாது. தனியார் மயமாக்கல் தொடர்பாக அரசு சார்பில் முன்னெடுக்கப்பட்டிருக்கும் அனைத்து முயற்சிகளையும் கைவிட வேண்டும்.

10) அனைவருக்குமான கல்வி உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். கல்வியைத் தனியார் மயமாக்குகிற முயற்சிகள் மற்றும் 1981இல் கல்வி தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி தாக்கல் செய்த வெள்ளை அறிக்கை ஆகியவற்றைக் கைவிட வேண்டும். கல்வி மேம்பாடு குறித்து புத்திஜீவிகள், கல்வியாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரது கருத்துகளைக் கவனத்திலெடுத்துக் கொள்ள வேண்டும்.

11 தேசிய உற்பத்திக்குப் பங்காற்றுகிற அனைத்துத் தரப்பு தொழிலாளர்கள், விவசாயிகள், வர்த்தகர்கள், தொழில் முனைவோர், நுகர்வோர் உள்ளிட்டோரின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஜே.வி.பி. முன்வைக்கின்ற செயற்திட்டங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

12) சிறிலங்கா அரசின் வெளியுறவுக் கொள்கையானது அணிசேராக் கொள்கையாக இருக்க வேண்டும். வெளியுற வுக் கொள்கை குறிப்பாக தெற்காசியப் பிராந்தியம் மற்றும் ஆசிய நாடுகளுடனான ஒத்துழைப்புக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்ற வகையில் இருக்க வேண்டும்.

ஜே.வி.பி யின் இந்த நிபந்தனைகள் குறித்து மகிந்தராஜபக்ஷ தரப்பிலிருந்து கருத்துகள் எவையும் வெளியிடப்படவில்லை.

## பாராளுமன்று...

என்பதால் எதிர்வரும் வரவு-செலவுத் திட்டத்தை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்படும் என்றும் அவ்வாறான நிலையில் பாராளுமன்றத்தை கலைத்து பாராளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டிய நிலை ஏற்படும் என்பதால் அதனை முன்கூட்டியே மேற்கொள்ள சனாதிபதி திட்டமிட்டு வருவதாக ரவூப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் என்றும் அவர் சனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின்னர் பாராளுமன்றம் கலைக்கப்பட்டால் அதில் சுதந்திர கட்சியினால் வெற்றி பெற முடியாது என்றும் சனாதிபதியின் ஆலோசகர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.சுதந்திரக் கட்சியிடம் இருந்து அனைத்து அதிகாரங்களும் ஐக்கிய தேசிய கட்சிக்கு செல்வதை அனுமதிக்க முடியாது என்பதால் பாராளுமன்றத்தை கலைப்பதற்கு சனாதிபதி தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (32)

## சிப்பாய்....

யில் ஈடுபட்டிருந்த இராணுவ சிப்பாய்களுக்கு வழமை போன்று மாலை நேர தேனீர் மற்றும் சிற்றுண்டி விநியோகத்தில் ஈடுபட்டிக் கொண்டிருந்த வேளையில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.சம்பவத்தின் போது இவர் பயணம் செய்த முச்சக்கரவண்டி மீது இனந்தெரியாத நபர்கள் பதுங்கியிருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர்.

## கைக்குண்டுத்....

காயமடைந்தவர்களில் ஆறு பேர் பெண்கள் என்றும் மூவர் ஆண்கள் என்றும் பாணந்துறை பொலிசார் தெரிவித்தனர்.முன்னர் நடந்த ஒரு கொலைச் சம்பவத்திற்குப் பழிவாங்கவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என பொலிசார் சந்தேகிக்கின்றனர்.இத்தாக்குதலில் இலக்கு வைக்கப்பட்டவர்கள் எவரும் சம்பவ நேரத்தில் வீட்டில் இல்லை என்றும் பொலிசார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.

## அமெ.வில்...

25ஆயிரம் முதல் 35 ஆயிரம் டொலர் வரை நிதி திரட்டத் திட்டமிட்டுள்ளோம்.எமது வேண்டுகோளை ஏற்று அமெரிக்க வாழ் தமிழர்கள் மற்றும் இதர நாடுகளிலிருந்தும் தொடர்ந்து எம்மை தொடர்பு கொண்டு வருகின்றனர் எமது நிதி திரட்டல் இலககை நாம் அடைய முடியும் என்ற நம்பிக்கையை இது உருவாக்கியிருக்கிறது.

இந்த நிதியுதவியை எப்படி எங்கே அளிப்பது என்பது குறித்து நாம் இறுதி செய்யவில்லை. பாதிக்கப்பட்ட மக்கள் வேறு நகரங்களுக்கு இடப்பெயர்வுக்குள்ளாகி இருப்பதால் இது குறித்து நாம் விவாதித்து உரிய முடிவெடுப்போம் என்றார் ரஞ்சிதன்.அமெரிக்காவின் நியூ ஓர்லியன்ஸ், லூசியானா உள்ளிட்ட பகுதிகளைத் தாக்கிய இந்தக் கற்றினா சூறாவளியால் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்ததுடன் பல இலட்சக்கணக்கான மக்கள் இடப் பெயர்வுக்குள்ளாகியும் இருக்கிறார்கள்.

## படையினர்...

படையினர் மூவர், புகையிரத வீதியில் சென்று கொண்டிருந்த இரு அரசியல் பணி போராளிகளை இரவு 7.10 மணியளவில் வழிமறித்தனர். போராளிகள் தாம் விடுதலைப்புலிகள் எனக்கூறி போராளிகளின் அடையாள அட்டையைச் காட்டிபோது அதனைப் பார்த்தபின் அவர்களை உடற்பரிசோதனைக்குட்படுத்தி னர். அதன் பின் போராளிகள் வைத்திருந்த தனிப்பட்ட கோவைகளைப் பார்வையிட முற்பட்டபோது அதனைக் காட்ட போராளிகள் மறுத்தபோது படையினருக்கும் போராளிகளுக்கும் இடையே கடும் முறுகல் ஏற்பட்டது. இந்நிலையில் போராளிகள் தாம் இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவிடம் முறையிடப் போவதாகப் படையினரிடம் கூறிவிட்டு கையடக்கத் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ள முயற்சித்தபோது படையினர் உடனடியாக அவ்விடத்தை விட்டுச் சென்றுள்ளனர். (10)

## ஜே.வி.பி யுடன்...

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் எத்தகையப் பிரச்சினைகளும் ஏற்படாதவாறு அவர்களுடன் கூட்டணி செயற்பட்டதாகவும் சனாதிபதி குறிப்பிட்டுள்ளார். இதன் காரணமாக நடைபெற்ற 14 தேர்தல்களில் 13 தேர்தல்களில் பொதுசன ஐக்கிய முன்னணியினால் வெற்றி பெறமுடிந்தது என்றும் சனாதிபதி குறிப்பிட்டார். ஜே.வி.பி.யுடன் இணைந்து ஒரு பொதுவான கொள்கை அடிப்படையில் செயற்படுவதை தாம் ஆட்சேபிக்கவில்லை என்றும், எனினும் தமது கட்சியின் கொள்கைகளை தாரை வார்க்காமல் கொண்டு நடத்த வேண்டுமெனவும் சனாதிபதி வலியுறுத் தியுள்ளார். சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கோ அல்லது அதன் அடிப் படைக் கொள்கைகளுக்கோ ஊறு விளைவிக்கக்கூடிய எத்தகைய ஒப்பந்தங்களையும் செய்யக்கூடாது என்று சனாதிபதி சுட்டிக்காட்டினார். கொள்கைகளை தாரை வார்க்கும் ஐக்கிய முன்னணி ஒன்றின் ஊடாக கட்சியின் ஒரு சாராரை மற்றுமொரு கட்சியால் அபகரிப்பதற்கு இடமளிக் கக்கூடாது என்றும் சனாதிபதி சுட்டிக்காட்டினார்.

## சிறிலங்கா...

இதனைத் தொடர்ந்து இந்த மாத நடுப்பகுதியில் ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத் தொடரில் கலந்து கொள்ளவுள்ள சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் ஐ.நா செயலா ளர் இந்த விடயம் குறித்த விரிவான பேச்சுவார்த்தை ஒன்றில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பேச்சுவார்தைகளின் முடிவில் ஐக்கிய நாடுகள் சபை இலங்கையின் சமாதான முயற்சிகளில் கலந்து கொள்வது தொடர்பான அறிவித்தல் வெளியிடப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபை இலங்கை இன விவகாரத்தில் தலையீடு செய்யும் பட்சத்தில் ஐக்கிய நாடுகள் அமைதிகாக்கும் படை ஒன்று இலங்கைக்கு அனுப்பிவைக்கப்படலாம் என்றும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. சனாதிபதியின் இந்த நடவடிக்கையானது 11 வருடகாலமாக தான் கொண்டிருந்த நிறைவேற்று அதிகாரங்களால் வெற்றி கொள்ள முடியாத விடுதலைப்புலிகளை சர்வதேச அழுத்தங்கள் மூலம் பணியவைக்க மேற்கொள்ளப்படும் முயற்சியாகவே அமையும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதி லக்டார் பர்ஹிமி நேற்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவரை சந்தித்து பேசியுள்ளார்.இந்தச் சந்திப்பில் முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் ஹசன் அலி மற்றும் சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் ஆகியோரும் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.இலங்கை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் டோக்கியோ பிரகடனத்தில் இணக்கம் தெரிவித்துள்ளமைக்கு அமைவாக சமாதானப் பேச்சுவார்தைகளில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக கலந்து கொள்வதை உறுதிப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர். (32)

வவுனியாப்பிரகடனத்துக்கு வலுவை கொடுத்திட
அவனி எங்கும் குரலெடுத்து ஆர்ப்பரித்து எழுவோம்!
முல்லை மாவட்ட எழுச்சி நாள் செயலணி

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.